DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1539 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 3, 2025

# ஸ்காபுறோவில் இசை ரசிகர்களுக்கு "இசையின்பத்தை" அள்ளி வழங்கவல்ல பிரபல பாடகர் கலை மாமணி ராமு மற்றும் வெற்றிப் பாடகி வர்ஷா ஆகியயோர் தமிழ்நாட்டிலிருந்து கனடா வந்தனர்



எதிர்வரும் அக்டோபர் 04ம் திகதி, சனிக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள தமிழிசை கலா மன்ற மண்டபத்தில் நண்பர் கேதீஸ் அவர்களின் "தமிழாரம்" தொலைக்காட்சி நிறுவனம் நடத்தும் 7 சுரங்கள் பாடல் போட்டி நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகவும் சிறப்புப் பாடகராகவும் வருகை தந்துள்ளார் சீ-தமிழ் தொலைக்காட்சியின் வெற்றியாளர் வர்ஷா.

அத்துடன் எதிர்வரும் ஒக்டோபர் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் குரு யோகராஜா அவர்களின் ஏற்பாட்டில் நடக்கும் "நெஞ்சம் மறப்பதில்லை" இசை நிகழ்ச்சியிலும் தமிழ்நாட்டிலிருந்து இருந்து வருகை தந்த கலை மாமணி ராமுவோடும் இணைந்து பாடவுள்ளார். மேற்படி இரண்டு பாடகர்களும் 1ம் திகதி புதன்கிழமையன்று ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தமிழ் ஆரம் தொலைக்காட்சி கேதீஸ். 12ம் திகதி இடம்பெறும் "நெஞ்சம் மறப்பதில்லை" ஏற்பாட்டாளர் குரு யோகராஜா மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் ஆகியோர் வரவேற்பதைக் காணலாம்.

(உள்ளே விளம்பரங்களைப் பார்க்கவும்)


# "தியாக தீபம் திலீபன் அவர்களின் தியாகத்தின் உயர்வை நமது இளைய தலைமுறையினர் ஊடாக பல தலைமுறைகளுக்கு காவிச் செல்லவேண்டும்"

## BEHIND ME INTERNATIONAL MEDIA ஊடக நிறுவனம் நடத்திய "தியாக தீபம்" திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழவில் நிறுவன அதிபர் கனேந்திரன் செல்வராஜா அழைப்பு!

எங்களைப் பொறுத்தளவில் தியாக தீபம் அவர்களின் தியாகத்தை மேலும் உலகம் அறியச் செய்யும் வகையில் நாம் எமது தமிழ் இளைஞர்கள் கையில் அவரது நினைவேந்தல் நிகழ்வுகளை ஒப்படைக்க வேண்டும். எமது இளைஞர்கள் பலர் திலீபன் அவர்களது தியாகத்தின் பெருமையையும் வலிமையையும் புகழந்து பாடல் பாடல்களை நினைவேந்தல்களில் உணர்வோடு பாடுகின்றார்கள். அந்த தியாக பற்றிய உரைகளை நேர்த்தியாக ஆற்றுகின்றனர். எனவே அவ்வாறான இளைஞர்களே எமது அடுத்த தலைமுறைகளுக்கு ஹதியாக தீபம்ஹ திலீபன் அவர்களின்நினைவுகளையும் அவரது தியாக சிந்தையும் தொடர்ச்சியாக எடுத்துச் செல்லக்கூடியவர்கள். (தொடர்ச்சி 17ம் பக்கம்)



# நான்கு தமிழ் பேசும் வேட்பாளர்கள் போட்டியிட்ட ரொறன்ரோ நகர சபையின் 25ம் வட்டார இடைத்தேர்தலில் நீதன் சண்முகராஜா மக்கள் ஆதரவோடு வெற்றி பெற்று மீண்டும் ஒரு தடவை அந்த ஆசனத்தில் அமர்ந்தார்



கடந்த செப்டம்பர் 29ம் திகதி நடைபெற்ற ரொறன்ரோ மாநகர சபையின் 25 வட்டாரத்திற்கான இடைத் தேர்தலில் 19 வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டு, மக்கள் எதிர்பார்த்த வகையில் அதிக வாக்குகளைப் பெற்று நீதன் சண்முகராஜா அவர்கள் வெற்றிபெற்று அந்த ஆசனத்தை மீண்டும் ஒரு தடவை கைப்பற்றிக் கொண்டார். அவர் மொத்த வாக்களிப்பில் 28 வீதத்தைப் தனதாக்கிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருக்கு கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

FEDERATION OF GLOBAL TAMILS
அனைத்துலக தமிழர் பேரவை

# முதல் சர்வதேச ஆராய்ச்சி மாநாடும்

# FGT யின் வருடாந்த விருந்தும்

**OCT 10**
5:30 PM to 10:00 PM
University of Toronto Scarborough

**OCT 11**
8:00 AM to 11:00 PM
University of Toronto Scarborough

**OCT 12**
5:30 PM to 11:30 PM
FGT Annual Dinner
Scarborough Convention Centre

Conference Entrance Free
Free Parking
FGT Dinner $100

First International Research Conference on the Prospects for Integrated Development of the North and East of Sri Lanka

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்த முதல் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு

**Conference Theme**

On the Prospects for Integrated Development of the North and East of Sri Lanka and the Role of Diaspora

மாநாட்டின் கருப்பொருள்

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் ஒருங்கிணைந்தவளர்ச்சிக்கான வாய்ப்புகள் மற்றும் புலம்பெயர் மக்களின் பங்கு

**For further information visit our website**
**https://conference.tamilfederation.org**
**or email: communication@tamilfederation.org**

**416.473.5348**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# சூழல் பாதுகாப்புக் காரணங்களுக்காக போராடும் பொதுமக்களை "பைத்தியக்காரகள்" என்று எண்ணுகின்றதா அநுராவின் அரசும் அதன் "ஏவல்நாய்"களான பொலிஸ் படையும்?

ஒரு தேசத்திற்குள் அடங்கும் ஒரு கிராமமோ அன்றி ஒரு நகரமோ இயற்கைக்கு மாறாக மாற்றம் பெறாமல் பாதுகாக்கப்பெற்றால் தான். அந்த தேசம் பாதுகாக்கப்பெறும் என்பதை இயற்கை விஞ்ஞானிகள் பலர் சான்றுகளுடன் எடுத்துச் சொல்லி வருகின்றார்கள். அதே போன்று நாம் வாழும் இந்த ஹபூமித் தாயின்ஹ மடியையும் அதன் வயிற்றையும் வளிமண்டலத்தையும் இயற்கைக்கு முரணான வகையில் நாம் மாற்றம் செய்ய முற்பட்டால் அந்தத் தாய் நிச்சயம் வேதனைப்படுவாள் அத்துடன் அவளது இருப்பும் பாதிக்கப்படும்.

இந்த வகையான விடயங்களில் உலகெங்கும் அதிகம் கவனத்துடன் செயற்படுபவர்கள் சூழல் விஞ்ஞானத்தைக் கற்றவர்களும் அதனைக் கடைப்பிடிப்பவர்களும் என்பதை நாம் கண்டு கொள்ள வேண்டும். இவ்வாறு இயற்கைக்கு மாறான திட்டங்களை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்கள்நடைமுறைப் படுத்த முயலுகின்ற போது, அங்கு வாழும் சூழல் பற்றிய அக்கறை கொண்டவர்கள் கிளர்ந்து எழுவார்கள் அல்லது போராட்டங்களை நடத்துவார்கள். இயற்கைக்கு மாறான திட்டங்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்த சில தீவிரமான இயற்கைப் பற்றாளர்கள் தங்கள் உயிர்களைக் கூட அர்ப்பணிப்பதற்கு தயங்க மாட்டார்கள்.

இவ்வாறான ஒரு போராட்டம் தான் எமது தாய் மண்ணும் தமிழ் மண்ணுமான மன்னார் பிரதேசத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்க திட்டமிட்ட முன்னைய அரசாங்கங்கள் மக்களின் போராட்டங்கள் காரணமாக அதனை பின்போட்டுக் கொண்டு சென்றன. மன்னார் பிரதேச மக்கள் கட்சி பேதமின்றி அந்த போராட்டங்களில் கலந்து கொண்டார்கள். இதனால் முன்னைய காலங்களை அரசாங்கங்களின் திட்டம் தவிடுபொடியானது என்று மன்னார் மக்கள் எண்ணி திருப்தியுடன் தங்கள் வாழ்க்கையை கொண்டு சென்றார்கள்

எனினும் தற்போதைய அநுர குமார திசநாயக்க அவர்களின் அரசாங்கம் பதவியேற்ற பின்னரும் மன்னாரில் காற்றலை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பாரிய இயந்திரங்களை அ ங்கு நிறுவ அதற்கு பொறுப்பான அமைச்சுக்களும் அதிகாரிகள் நடவடிக்கைகளைத் தொடர்ந்தார்கள் இதனால் மக்கள் போராட்டத்தை மீண்டும் நடத்தத் தொடங்கினார்கள்.

இவ்வாறான நிலையில் மன்னார் மக்கள் இலங்கை ஜனாதிபதிக்கும் மனுக்களை அனுப்பி வைத்தும் அமைச்சர்களுக்கும் இந்த திட்டத்தின் பாதிப்புக்களை எடுத்துச் சொல்லியும் போராட்டங்களை தொடர்ந்து நடத்திக் கொண்டிரந்தனர்.

இந்த திட்டத்தை எவ்வாறாயினும் நிறைவேற்றியே தீருவோம் என்றும் அரசாங்கமும் அதிகாரிகளும் தொடர்ச்சியாக முயன்று கொண்டிருந்த வேளையில் ஜனாதிபதி அவர்களிடம் இருந்து தமக்கு சாதகமான பதில்வரும் என்று போராட்டக்காரர்கள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த காற்றலை மின்சார உற்பத்தித் திட்டம் கைவிடப்படுவதாக இல்லை.

இந்த வாரத்திலிருந்து சுமார் 50 நாட்களுக்கு முன்பாக தொடங்கிய மன்னார் மக்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்க இலங்கை ஜனாதிபதி தங்கள் விண்ணப்பங்களையும் எண்ணங்களையும் ஏற்றுக் கொள்வார் என்று அவர்கள் காத்திருந்தார்கள் .

ஹஹ ஜனாதிபதியின் முடிவுகள் மன்னார் மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியையும் கவலையையும் தருகிறது.ஜனாதிபதி தனது மக்களாகிய எங்களுடன் பேசுவார் மக்களின் வாழ்வை பாதிக்காத வகையில் கலந்தாலோசித்து முடிவுகள் எடுப்பார் என எதிர்பார்த்து இருந்தோம். இப்போது நாங்கள் வஞ்சகமான முறையில் ஏமாற்றப் பட்டுள்ளோம். ஜனாதிபதியின் முடிவுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.உடன் வேலைகளை நிறுத்தி ஜனாதிபதியுடன் பேசி முடிவுகளை எடுக்க எதிர்பார்க்கின்றோம்ஹஹ. இவ்வாறு போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்க காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறத் தொடங்கின என்ற செய்தி மன்னாரில் போராட்டக்காரர்களுக்கு கிடைத்தது.

இதனால் அவர்கள் தங்கள் போரட்டங்களை தீவிரப்படுத்தினார்கள்.

இந்த நிலையிலும் ஜனாதிபதிக்கு மீண்டும் கடிதம் எழுதினார்கள் "தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் என்று அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். மன்னார் அரசாங்க அதிபரிடமும் அந்த வேண்டுகோளை விடுத்தார்கள்.

ஆனால் மக்களின் எதிர்ப்பை மீறி நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்புடன் கலகம் அடக்கும் போலீசார் துணையுடன் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்கள் பாரிய வாகனங்களில் மன்னார் நகரை நோக்கி கொண்டுவரப்பட்டு கொண்டிருக்க அதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி தங்கள் உயிரையும் துச்சமென மதித்து போராடினார்கள். இந்த நிலையில் ஒன்று கூடிய பல நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து மன்னார் நுழைவு பகுதியில் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைக்க தேவையான உபகரணங்களை திருகோணமலை துறைமுகத்தில் இருந்து மன்னார் தீவுக்கு கொண்டு வரும் வேலைகள் நடைபெறுகின்ற நிலையில் தயவுசெய்து அவற்றை உடன் நிறுத்தி மக்களிடம் பேச நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறிருக்க கடந்த 25-09-2025 அன்றைய தினம் வியாழக்கிழமைமதியம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களிடம் கையளித்த மகஜரில் பல முக்கியமான வியங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன..

தயவுசெய்து மன்னார் காறாலை மின்சார உற்பத்தித் திடடத்தை உடன் நிறுத்தி மக்களிடம் பேசவும்.மக்களுடைய விருப்பத்திற்கும் உரிமைக்கும் எதிராக நீங்கள் செய்ய இருக்கும் நடவடிக்கைகளினால் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் நீங்களே பொறுப்பு கூற வேண்டி வரும்.

ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கும் வரை மக்கள் போராட்டமானது இலங்கை யாப்பிற்கும் சட்டத்திற்கும் உட்பட்டு முன்னெடுக்கப்படும்.எங்கள் புனித போராட்டமானது விரிவடைந்து செல்வது உங்களுக்கு தெரியும். அதை இன்னும் விரைவாக எமது நாடு பூராவும் விரிவுபடுத்த உள்ளோம்.

ஜனாதிபதி அவர்களினால் தரப்பட்ட ஒரு மாத கால வேலை நிறுத்தத்தை கவனிப்பதற்கு ஒரு குழு உங்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது.உங்கள் குழுவானது அந்த பகுதியில் நடந்த வேலைகளை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

இலங்கை மின்சார சபையானது பாரிய வேலைகளை முன்னெடுத்துள்ளது.தரப்பட்ட கடிதங்கள் தெளிவில்லை ஏமாற்றப் படுகின்ற விதத்தில் அமைந்துள்ளது.

எனவே தயவு செய்து உடனடியாக மக்களின் வாழ்வினையும் வளத்தையும் பாதுகாக்க நடவடிக்கை மேற் கொள்வதை எதிர்பார்க்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் பாரிய இயந்திர உபகரணங்களும் தூண்களும் காற்றாடிகளின் உபகரணங்களும் மன்னரை நோக்கி பாரிய வாகங்களில் கொண்டுவரப்பட்டன. எனவே மக்கள் அவற்றிக்கு எதிராக வீதிகளில் நின்று போராடினார்கள். ஆனால், அநுரவின் அரசாங்கமும் அதன் ஏவல்நாய்களாக உள்ள பொலிஸ் படையும் போராட்டக்காரர்களை தாக்கியும் கைது செய்தும் மக்கள் போராட்டத்தை மழுங்கடிக்க முனைகின்றன என்ற செய்தி புலம்பெயர்ந்த நாடுகளில் உள் ஊடகங்களுக்கும் வந்து சேர்ந்தவண்ணம் உள்ளன.

மன்னாரில் 26ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் இரவு முதல் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களை பொலிஸார் கொடூரமாக தக்கிய நிலையில் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த பொது மக்கள் அவசர அம்புலன்ஸ் சேவை ஊடாக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸார் தங்கள் மீது உள்ள குற்றத்தை மறைக்கும் விதமாக பொதுமக்கள் மீது பல்வேறு விதமான பொய்யான வழக்குகளை தொடுத்து அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் மும்முறமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மேலும் போராட்டத்தில் முன்னின்று செயற்படும் சமூக செயற்பாட்டாளர்கள் சிலரை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றனர். ஜனநாயக ரீதியாக நடைபெற்ற போராட்த்தில் அரஜகமாக மக்களை தாக்கியது மாத்திரம் இல்லாமல் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் பெலிஸார் மேற்கொண்டுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் அமைதியான மக்கள் போராட்டத்தில் பெண்கள், மதகுருக்கள், பொதுமக்கள் மீது கண் மூடித்தனமான தக்குதலை மேற்கொண்ட பொலிஸார் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை போராட்டகுழு முன்னெடுக்கவுள்ளதுடன் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் முறைப்பாட்டு பிரிவிலும் முறைப்பாடு மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே நாம் இந்த மாதத்தின் தேசக்குரலின் மூலம் எமது குரலையும் எழுத்துக்களையும் மன்னார் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகப் பதிவு செய்கின்றோம். இலங்கையின் முன்னைய பாசிச அரசாங்களைப் போலல்லாது தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையில் மக்களின் குரல்களுக்கு மதிப்பளிக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்த வேளையில் அந்த அரசாங்கத்தை தெரிவு செய்த மக்களையும் அவர்கள் சார்ந்த அமைப்புக்களையும் ஏமாற்றிவிட்டது என்ற விசனத்தோடு மக்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் போது உலகெங்கும் உள்ள இலங்கையர்கள் அனைவரும் மன்னார் மக்களிலின் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுப்பெற்று வருகின்றன. ஆனால் வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் இந்த போராட்டங்களில் காணவில்லை. அவர்கள் மக்கள் பக்கம் இல்லை. ஆட்சி செய்யும் "மன்னர்களின்" பக்கம் தான் எப்போதும்

**Room for rent in Scarborough**

**Room for rent in Scarborough .**
**Rent $800/=. 1 B/R. 1 Bath. Central heating furnished.**
**Location at Bridletowne and Finch.**
**Contact Ranjitham at 647 648 8822**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னாரில் காற்றலை மின்சார திட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்தும் பொதுமக்களை தாக்கியது மத்திரம் அல்லாமல் வைத்தியசாலையில் உள்ளவர்களை கைது செய்ய முயற்சிக்கும் "ஏவல்நாய்களான" பொலிஸார்

27.09.2025

மன்னாரில் 26ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் இரவு முதல் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களை பொலிஸார் கொடூரமாக தக்கிய நிலையில் தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த பொது மக்கள் அவசர அம்புலன்ஸ் சேவை ஊடாக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸார் தங்கள் மீது உள்ள குற்றத்தை மறைக்கும் விதமாக பொதுமக்கள் மீது பல்வேறு விதமான பொய்யான வழக்குகளை தொடுத்து அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் மும்முறமாக ஈடுபட்டுள்ளனர்.







குறிப்பாக மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மேலும் போராட்டத்தில் முன்னிறு செயற்படும் சமூக செயற்பாட்டாளர்கள் சிலரை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றனர்.

ஜனநாயக ரீதியாக நடைபெற்ற போராட்த்தில் அரஜகமாக மக்களை தாக்கியது மாத்திரம் இல்லாமல் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையையும் பெலிஸார் மேற்கொண்டுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் அமைதியான மக்கள் போராட்டத்தில் பெண்கள், மதகுருக்கள், பொதுமக்கள் மீது கண் மூடித்தனமான தக்குதலை மேற்கொண்ட பொலிஸார் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை போராட்டகுழு முன்னெடுக்கவுள்ளதுடன் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸ் முறைப்பாட்டு பிரிவிலும் முறைப்பாடு மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் காற்றாலைக்கு எதிராக அணி திரண்ட பல ஆயிரக்கணக்கான மக்கள் – அனைத்து செயல்பாடுகளும் ஸ்தம்பிதம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (29-09-2025)

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை திட்டத்திற்கு எதிராகவும், மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்தும் 29ம் திகதி திங்கட்கிழமை மன்னாரில் பொது முடக்கப் போராட்டம் இடம்பெற்ற நிலையில் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மன்னார் மாவட்டம் முழுவதும் 29ம் திகதி அன்றைய தினம் திங்கட்கிழமை பொது முடக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மன்னார் பிரஜைகள் குழு மற்றும் போராட்டக்குழு இணைந்து குறித்த அழைப்பு விடுத்திருந்தனர்.

இதன்போது அன்றைய தினம் திங்கட்கிழமை (29) காலை முதல் மன்னார் பஜார் பகுதி உள்ளடங்களாக அனைத்து பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது.

தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. பல்வேறு கிராமங்களில் உள்ள மீனவர்கள் கடற்தொழிலுக்கு செல்லவில்லை. இந்த நிலையில் காலை 10.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடினர்.

பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டன பேரணி ஆரம்பமானது.

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல்,மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பொலிஸாரினால் பொதுமக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களை கண்டித்து குறித்த பேரணி ஆரம்பமானது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் இருந்து போராட்டக்குழு ஒன்று வருகை தந்தது.மேலும் வடக்கில் உள்ள சில மாவட்டங்களில் இருந்தும் ஆதரவு தெரிவித்து சமூக செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான குறித்த பேரணி பொது வைத்தியசாலை வீதியூடாக சென்று மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது.

பின்னர் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடிய மக்கள் காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இதனால் குறித்த பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது. பின்னர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மக்கள் ஒன்று கூடி இடத்திற்கு வருகை தந்தார்.

இதன் போது போராட்டக்குழு சார்பாக ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டிய கடிதம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. கடிதத்தை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் உடனடியாக மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்தார்.இதனை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாக போராட்டம் இடம் பெறும் பகுதிக்குச் சென்றனர்.

இந்த நிலையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்ட நிலையில் தாக்குதலை மேற்கொண்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதனால் பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் முருகல் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் கலகம் அடக்கும் பொலிஸார் அவ்விடத்திற்கு அழைக்கப்பட்டனர். பின்னர் தொடர்ச்சியாக முருகல் நிலை ஏற்பட்ட நிலையில் மத தலைவர்கள் அவ்விடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடு பட்டவர்களுடன் கதைத்து அவ்விடத்தில் இருந்து அனைவரையும் அகற்றினர். அதனை தொடர்ந்து பஜார் பகுதியில் நின்று தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.





மேலும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை கோபுரங்கள் அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மக்கள் மீது தாக்குதல் நடத்திய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தனர். குறித்த போராட்டத்தில் சர்வமத தலைவர்கள், பல ஆயிரக்கணக்கான மக்கள் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் ஒரே நாளில் பல உணவகங்கள் மீது சுகாதர நடவடிக்கை

01.10.2025

மன்னார் நகரசபை எல்லைக்குள் உரிய சுகாதார நடை முறைகளை பின் பற்றாது இயங்கி வந்த ஒரு வெதுப்பகம் உட்பட மூன்று உணவகங்கள் மீது நகர சபை சுகாதார பரி-சோதகர் உள்ளிட்ட குழுவினர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

30ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றைய தினம் மன்னார் பொது வைத்திய சாலையை சூழ உள்ள உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களில் மன்னார் நகர சபை சுகாதர பரிசோதகர் மற்றும் மன்னார் நகர சபை சுகாதார குழுவினர் மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போதே மேற்படி சுகாதார நடை முறைகளை பின்பற்றாமல் இயங்கி வந்த உணவகங்கள் மீது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

குறிப்பாக உரிய அனுமதி இன்றி இயங்கி வந்த உணவகங்கள், கழிவு நீர் உரிய முறையில் அகற்றப்படாமல் இயங்கி வந்த வெதுப்பகம், மருத்துவ சான்றிதல் இன்றி பணிபுரிந்த ஊழியர்கள், அதிகளவான இளையான்கள், சுகாதார நடைமுறையை பின் பற்றாது உணவுகள் களஞ்சியப் படுத்தப் பட்டிருந்தமை உள்ளடங்களாக பல்வேறு சுகாதார பிரச்சினைகளின் அடிப்படையில் உணவகங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது.



அதன் அடிப்படையில் குறித்த உணவகங்களுக்கு எதிராக எதிர் வரும் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையின் வட மாகாணத்தில் போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு நிலையம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்!



பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையாவோருக்கு புனர்வாழ்வு வழங்கும் வகையில் புனர்வாழ்வு நிலையம் அமைத்தல் மற்றும் உதவிநாடும் நிலையம் அமைத்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் மீளாய்வு ஆளுநர் செயலகத்தில் 2ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்புடன் கடந்த ஜூலை மாதம் ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. அதன்போது ஆராயப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் இன்றைய கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் குருநகரிலும், முல்லைத்தீவில் ஒட்டுசுட்டானிலும், மன்னாரில் முருங்கனிலும் உள்ள மருத்துவமனைகளில் உதவிநாடும் நிலையங்கள் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குருநகர் மருத்துவமனையின் திருத்த வேலைகள் நிறைவுறுவதற்கு கால அவகாசம் தேவை என்பதால், அதுவரையில் பிறிதொரு மருத்துவமனையில் உதவிநாடும் நிலையம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் மற்றும் முருங்கன் மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளமையால் அவற்றில் உடனடியாக உதவிநாடும் நிலையங்களை ஆரம்பிப்பதற்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

புனர்வாழ்வு நிலையத்தை நிரந்தரமாக அமைப்பதற்கு யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் காணி ஒதுக்கப்பட்டு இது தொடர்பான கடிதம் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.



புனர்வாழ்வு நிலையம் நிரந்தரமாக அமைக்கப்படும் வரையில் கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அல்லது முல்லைத்தீவில் இயக்குவது தொடர்பில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அங்குள்ள கட்டடங்கள் தொடர்பில் முழுமையான ஆய்வை மேற்கொள்வதற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் குழுவினரும், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழான குழுவினரும் இணைந்து விரைந்து களப்பயணம் மேற்கொள்வது என்றும் இந்த ஆண்டு இறுதிக்குள் ஏதாவது ஓரிடத்தில் புனர்வாழ்வு நிலையத்தை ஆரம்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை கடுமையாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஆளுநர், தன்னை புதன்கிழமை சந்தித்த மாணவர்கள் அது தொடர்பில் பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வந்தமையும் இங்கு குறிப்பிட்டார். எனவே விழிப்புணர்வு செயற்பாடுகளை விரிவுபடுத்துவதுடன் விரைவுபடுத்துவதன் தேவைப்பாட்டையும் ஆளுநர் வலியுறுத்தினார். சில பாடசாலைகள் விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்காமை தொடர்பாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறு எந்தவொரு பாடசாலையும் அவ்வாறு ஒத்துழைக்காமல் இருக்க முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், அது தொடர்பில் இறுக்கமான அறிவுறுத்தல்களை வழங்க பிரதம செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

அதேநேரம், ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள், மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களின் கீழ் பணியாற்றும் பொருத்தமான கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் ஆகியனவற்றை தொடர்ந்து முன்னெடுக்கவும், இது தொடர்பான ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்குமாறும் பிரதம செயலாளரை ஆளுநர் அறிவுறுத்தினார்.

பாடசாலை இடைவிலகல் தொடர்பான தகவல்கள் உரிய நேரத்துக்கு உரிய திணைக்களங்களுக்கு பகிரப்படுவது தொடர்பான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. மேலும், போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் திணைக்களங்களின் கண்காணிப்பில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேநேரம், சில வலி நிவாரணிகளை உயிர்கொல்லி போதை மாத்திரைகளாகப் பயன்படுத்துவது தொடர்பில் கடந்த கூட்டங்களில் ஆராயப் பட்டிருந்தது. அது தொடர்பில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடம் கண்காணிப்பை இறுக்குவது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முன்னேற்றகரமான நிலைமை காணப்படுவதால் வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களிலும் இதே நடைமுறையைப் பின்பற்றுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர்கள், வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.



# யாழ்ப்பாண பொருளாதார மத்திய நிலையத்தின் மூன்றாவது "திறப்பு விழா":

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## வடக்கு-கிழக்கு விவசாய பொருளாதாரத்தின் உண்மையான நெருக்கடிகளை மறைக்கும் "அரசியல் நாடகம்"



யாழ்ப்பாணம் மட்டுவில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையமானது, சில தினங்களுக்கு முன்னர் மூன்றாவது தடவையாக திறப்பு விழா கண்டது. கொடியவனான கோத்தபாயா ராஜபக்சே ஆட்சிக்காலத்தில் ரூபா 198.80 மில்லியன் செலவில் கட்டப்பட்ட இந்த மத்திய நிலையத்திற்கு முன்னர் அவனது அண்ணன் மஹிந்த ராஜபக்சே, அங்கயன் இராமநாதன், பின்னர் ரணில் விக்ரமசிங்கே காலத்தில் காதர் மஸ்தான், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் முன்னிலையில் திறப்பு விழா நடத்தப்பட்டது. இப்போது ஜேவிபியின் அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் சந்திரசேகரன் ஆகியோரின் முன்னிலையில் அதே மத்திய நிலையம் மீண்டும் திறக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த "திறப்பு விழா நாடகங்கள்" அனைத்தும் பொது நிதியிலேயே நடத்தப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் வடக்கு-கிழக்கின் விவசாய பொருளாதாரம் கடுமையான அழிவைச் சந்தித்துக் கொண்டிருப்பதைப் பற்றி எந்த அரசியல்வாதிகளும் சிந்திக்கவில்லை.

### வடக்கு-கிழக்கின் விவசாய பங்களிப்பு - வரலாற்றுப் பின்னணி

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இலங்கையின் விவசாய உற்பத்தியின் முதுகெலும்பாக இருந்துள்ளன.

- மொத்த உள்நாட்டு விவசாய உற்பத்தியில் 20.5% பங்கு வடக்கு-கிழக்கு என்னும் தமிழர் தாயகத்தினால் வழங்கப்பட்டது.
- மொத்த நெல் உற்பத்தியில் 1/3 பங்கு வடக்கு-கிழக்கு என்னும் தமிழர் தாயக விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டது.
- கால்நடை வளர்ப்பில், நாட்டின் மொத்தக் கால்நடைகளில் 60% வடக்கு-கிழக்கு என்னும் தமிழர் தாயகத்தில் காணப்பட்டன.

இதனால், தேசிய உணவுப் பாதுகாப்பு, பால் உற்பத்தி, நெல் உற்பத்தி ஆகிய துறைகளில் வடக்கு-கிழக்கு என்னும் தமிழர் தாயகத்தினால் வழங்கப்பெற்ற பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

### நில ஆக்கிரமிப்புகளின் தொடக்கம் - இராணுவம், திணைக்களங்கள், சமயத் தலைவர்கள்

இன்று அந்த வளமான நிலங்கள் பெருமளவில் ஆக்கிரமிக்கப்பட்டு கிடக்கின்றன.

- யாழ்ப்பாணம் வலி வடக்கு - 2,600 ஏக்கர் நிலம் இராணுவ ஆக்கிரமிப்பில்.
- காங்கேசன்துறை - 500 ஏக்கர் நிலத்தில் இராணுவம் தானாகவே விவசாயம் செய்து வருகிறது.
- கிளிநொச்சி வட்டக்கச்சி, முல்லைத்தீவு தேரா, மன்னார் வெள்ளாங்குளம், வவுனியா செட்டிகுளம் - குறைந்தது 13 பண்ணைகள் இராணுவக் கட்டுப்பாட்டில்.
- முல்லைத்தீவு மாவட்டம் - 32,110 ஏக்கர் நிலம் வனவள திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.
- முல்லைத்தீவு மாவட்டம் - 23,515 ஏக்கர் நிலம் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டுள்ளது.
- திருகோணமலை குச்சவெளி - 70,039 ஏக்கர் விவசாய நிலம் வனவள திணைக்களம் வசப்படுத்தியுள்ளது.
- அதேபோல் பாணமுரே திலகவன்ச தேரர், கல்கமுவ சாந்தபோதி தேரர் ஆகியோர் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை கைப்பற்றியுள்ளனர்.

இதோடு, வன்னி பிரதேசத்தில் 732 விவசாயக் குளங்கள் வனவள திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

### பொருளாதார விளைவுகள் - விவசாயிகளின் வாழ்வாதார இழப்பு

இந்த நில ஆக்கிரமிப்புகள் வடக்கு-கிழக்கின் ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழித்துவிட்டன.

- இராணுவம் முல்லைத்தீவு மாவட்டப் பண்ணைகளில் ஆண்டு தோறும் 15 மில்லியன் ரூபா, கிளிநொச்சி பண்ணைகளில் 13 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டுகிறது. ஆனால் அதன் பயன் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை.
- 370,000 கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் மறுக்கப்பட்டதால் பால் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
- மட்டக்களப்பில் 300,000 கால்நடைகள் மேய்ச்சலுக்குப் பயன்படுத்திய நிலங்களில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டுள்ளனர்.

இதன் விளைவாக, விவசாய உற்பத்தி குறைந்து கொண்டே செல்கிறது, ஆனால் விவசாயிகளின் வறுமை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

### அரசியல் நாடகம் - திறப்பு விழாக்கள், ஆனால் தீர்வு இல்லை

மஹிந்த ராஜபக்சே முதல் ஜேவிபி வரை, எல்லா அரசியல்வாதிகளும் ஒரே மாதிரியாக பொது நிதியை வீணடித்து திறப்பு விழாக்கள் நடத்துகின்றனர்.

- நில ஆக்கிரமிப்புகள், விவசாயப் பண்ணைகள், குளங்கள், மேய்ச்சல் நிலங்கள், நீதிமன்ற தீர்ப்புகள் ஆகியவற்றைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை.
- ஜேவிபி அதிகாரத்தில் ஒரு வருடம் கடந்தும் எந்த தீர்வும் வழங்கப்படவில்லை.

இது அரசியல் காட்சிநாடகம் மட்டுமே என்பதை வெளிப்படுத்துகிறது.

### சந்தை மற்றும் இறக்குமதி நெருக்கடிகள்

வடக்கு-கிழக்கில் பாரம்பரியமாக ஆண்டுக்கு மூன்று முறை உற்பத்தி செய்யப்பட்ட சின்ன வெங்காயம் இன்று ஒரு முறை மட்டுமே பயிரிடப்படுகிறது. அதற்கிடையில் அரசு அறுவடை காலத்திலேயே இறக்குமதி அனுமதி வழங்கியது. இதனால் விவசாயிகள் கடுமையான இழப்பைச் சந்தித்தனர்.

மேலும், அரிசி, பால், காய்கறி, வெங்காயம் போன்ற அடிப்படை உணவுப் பொருட்களுக்குக் கூட இறக்குமதி சார்ந்த பொருளாதாரம் உருவாகிவிட்டது.

### உலகளாவிய மாற்றங்கள் - உற்பத்தி சார்ந்த பொருளாதாரம்

இன்றைய உலகம் முழுவதும் நாடுகள் தங்களது உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்தும் திசையில் நகர்கின்றன.

ஆனால் இலங்கை, குறிப்பாக வடக்கு-கிழக்கு விவசாயப் பகுதிகள், உற்பத்தியை முற்றிலும் புறக்கணித்து இறக்குமதி சார்ந்த அடிமைத்தனத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

இதனால் தேசிய உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகிறது.

வடக்கு-கிழக்கு என்னும் தமிழர் தாயகத்தினால் விவசாய பொருளாதாரம் ஒருகாலத்தில் தேசிய உற்பத்தியில் முதுகெலும்பாக இருந்தது. ஆனால் இன்று இராணுவ ஆக்கிரமிப்புகள், வனவள திணைக்கள அபகரிப்புகள், அரசியல் அலட்சியம், சந்தை நெருக்கடிகள் ஆகியவற்றால் அந்த பொருளாதாரம் முற்றிலும் சிதைந்துவிட்டது.

**கேள்வி:** திறப்பு விழா நடத்தும் அரசியல்வாதிகள் யாரேனும் இந்த விவசாய நிலங்களை மீட்டு, பண்ணையாளர்களுக்கு ஒப்படைக்கும் துணிச்சலைக் காட்டுவார்களா?

**உண்மை:** வடக்கு-கிழக்கின் விவசாய நிலங்கள் மீட்கப்படாவிட்டால், தேசிய உணவுப் பாதுகாப்பும், தமிழ் மக்களின் வாழ்வாதார உரிமையும் நிச்சயம் அழிந்துவிடும்.






**எழுதியவர்: ஈழத்துத் நிலவன்**
**தமிழ் தேசிய வரலாற்றாசிரியர் | உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ ஆய்வாளர்**
**02-10-2025**



# யாழ்ப்பாண நகரின் பஸ்நிலையம் அமைந்திருக்கும் பகுதியில் வன்முறை குழுக்கள் அட்டகாசம் — மக்கள் அச்சம்!



யாழ். நகர் பகுதியில் வன்முறை குழுக்கள் அட்டகாசம் - மக்கள் அச்சம்!

1ம் திகதி புதன்கிழமைத அன்று மாலை 5.40 மணியளவில் யாழ். நகர் பகுதியில் வன்முறை குழுக்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டனர். இதன்போது தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் யார்? தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்ற விடயங்கள் வெளியாகவில்லை.

பொது இடத்தில் இவ்வாறு வன்முறையில் ஈடுபட்டதால் மக்கள் அச்ச நிலையில் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. இது குறித்து பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுத்து பொது இடத்தில் அமைதிக்கு குந்தகம் விளைவித்து, மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வு



சிறுவர் தினமானது சர்வதேச ரீதியாக 1ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் கடைப்பிடிக்கப்பட்டது. அந்தவகையில் யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் சிறுவர் தின நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு மு.ப 10.30 மணியளவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் ஆரம்பமானது.

இதன்போது மாணவர்களது பல்வேறு கலை நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றன. அத்துடன் போதைக்கு எதிரான விழிப்புணர்வு நாடகம் ஒன்றும் மாணவர்களால் ஆற்றப்பட்டது. இறுதியாக "மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் பங்காற்றுவது பெற்றோர்களா" ஆசிரியர்களா என்ற தலைப்பில் ஆசிரியர்களால் பட்டிமன்றம் ஒன்றும் நிகழ்த்தப்பட்டது. இதில் கல்லூரியின் பதில் அதிபர் மயூரன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு பாலமீன் மடுவிக்னேஸ்வராவித்தியாலய அதிபரை இடமாற்றுமாறும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்குமாறும் கோரி பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபரை இடமாற்றுமாறும் கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி பாடசாலை 2ம் திகதி அன்று வியாழக்கிழமை மாணவர்கள் பாடசாலை முன் கதவை பூட்டி பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் எவரும் உட்செல்ல விடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையில் தரம் 11ம் ஆண்டுக்கு கல்வி கற்பித்து வந்த ஆசிரியர் கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டார் அதேவேளை அதிபருக்கு ஆதரவாக இருக்கும் சிலரால் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அவர் கடந்த 4 தினங்களுக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த பாடங்களுக்கு கடந்த 4 மாதங்களாக ஆசிரியர் இல்லாது இருந்து வருகின்றதுடன் க.பொ.த சாதாரண பரீட்சைக்கு இன்னும் 4 மாதங்கள் மட்டுமே இருக்கின்றது இது தொடர்பாக அதிபர் மற்றும் வலயக் கல்வி பணிமனையின் கவனத்துக்கு கொண்டு வந்தும் இதுவரை ஒரு தீர்வும் இல்லை.

இந்த நிலையில் பாடசாலை அதிபரை இடமாற்றுமாறு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வலய கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக முறைப்பாடுகள் செய்திருந்தனர் இதற்கு இதுவரை தீர்வும் கிடைக்கவில்லை எனவே எங்களுக்கு உடனடியாக அதிபரை இடமாற்றம் செய்து குறித்த பாடங்களுக்கான ஆசிரியர்களை வலயக்கல்வி பணிப்பாளர் நியமித்து தரும் வரைக்கும் பாடசாலை கதவை திறக்க முடியாது என மாணவர்கள் சுலோகங்கள் ஏந்தியவாறு காலை 7.00 மணி தொடக்கம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து குறித்த போராட்ட இடத்திற்கு தேசிய மக்கள் சக்தி மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு விஜயம் செய்து



மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டார் இதன்போது அங்கு சிற்றுண்டிச்சாலை நடத்தி வருவதுடன் பாடசாலை மாணவர்களுக்கு சமைத்து உணவு வழங்கி வரும் பெண் ஒருவர் தான் கடந்த 7 வருடங்களாக அங்கு சிற்றுண்டிச்சாலை நடத்தி வருவதாகவும் குறித்த அதிபர் என்னிடம் ஒரு மாணவருக்கு 5 ரூபா வீதம் மாதம் 15 ஆயிரம் ரூபா தருமாறு கோரி நான் 35 ஆயிரம் ரூபா கொடுத்தேன் அதற்கு நன்கொடை என ஒரு பற்று சீட்டில் எனது பெயரும் மற்ற பற்றுச்சீட்டு எனது சகோதரியின் பெயர் இட்டு தந்துள்ளார்.




கடந்த 5ம் மாதம் 10ம் 11ம் ஆண்டு மாணவர்களுக்கு 62 ஆயிரம் ரூபா பணத்தை ஒரு ஆசிரியருக்கும் தெரியாமல் தருமாறு கேரிய நிலையில் அதனை அவரிடம் கொண்டு சென்று கொடுக்கும் போது அதிபர் என்னிடம் யாருடம் பறையடித்தனி என கேட்டு பணத்தை பெற்றுக் கொண்டார் அது எனக்கு மிகவும் கவலை என தெரிவித்ததையடுத்து உடனடியாக சம்மந்தப்பட்ட வலயக்கல்வி பணிப்பாளரின் கதைப்பதுடன் இங்கு நடந்துள்ளவை தொடர்பாக குழு ஒன்றை அமைத்து விசாரணை மேற்கொள்வதாகும் அதன் ஊடாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக ஆர்ப்பாட்ட காரர்களுக்கு உறுதியளித்தார்.

இதனை தொடர்ந்து மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் தினகரன் ரவி சென்று மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அதிபர் தொடர்பாக கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் அங்கிருந்து பதில் வரும் வரை அவர் இன்று தொடக்கம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு தற்காலிகமாக அங்கு மாற்றுவதாகவும் உத்தரவாதம் அளித்ததையடுத்து பகல் 12.00 மணிக்கு மாணவர்கள் கதவை திறந்து உட்செல்ல அனுமதித்தனர்.

இதையடுத்து கல்வி பணிப்பாளர் மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்களை பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து கலந்துரையாடலில் ஈடுபட்டு பிரச்சனையை நிவர்த்தி செய்யும் நோக்கிலும், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையா வண்ணம், அதிபரை தற்காலிகமா குறித்த பாடசாலையிலிருந்து வலயக் கல்வி அலுவலகத்திற்கு மாற்றியதுடன், குறித்த பாடசாலை ஆசிரியர் ஒருவரை, பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படுவரை பொறுப்பாக பணியமர்த்த முடிவு செய்யப்பட்டதுடன் நாளை முதல் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் வழமை போல நடக்கும் என முடிவு எட்டப்பட்டது.


## Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் அமையவுள்ள "தமிழ் சமூக மையத்தின்" கட்டட திட்டத்திற்கு நிதி சேகரிக்கும் வகையில் கனடாவில் செயற்படும் தாயகப் உள்ள பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து நடத்தில் வைபவத்தில் 400,000 டாலர்களுக்கு மேல் திரட்டப்பெற்றது

கனடாவில் அமையவுள்ள "தமிழ் சமூக மையத்தின்" கட்டட திட்டத்திற்கு நிதி சேகரிக்கும் வகையில் கனடாவில் செயற்படும் தாயகப் உள்ள பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து நடத்திய ஒன்று கூடல் நிகழ்வு கடந்த Sep 20,2025 சனிக்கிழமை அன்று Brighton Convention Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது மத்திய அமைச்சர் கரி ஆனந்தசங்கரி - மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் இணையமைச்சர் விஜேய் தணிகாசலம் மற்றும் ரொறன்ரோ மாநகர முதல்வர் ஒலிவியா சோ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்து வாழ்த்துரைகளை வழங்கிச் சென்றார்கள்.

இந்த நிகழ்வின் போது பல்வேறு பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள் உயர்தரப் பிரிவு மாணவர் அமைப்புகள் மற்றும் பழைய மாணவர்கள் என அனைவரும் இணைந்து 400,000 டொலர்களுக்கான நிதி உதவி உத்தரவாதத்தை வழங்கியிருந்தனர்.




















மேற்படி நிதி சேர் நிகழ்வில் பல பாடசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோர் 10000 டாலர்களை விருப்புடன் வழங்கினார்கள். விஜயா நகை மாளிகையின் அதிபர் ரூபன் அவர்கள் ஐம்பதாயிரம் டாலர்களை வழங்கினார். மேலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் இணைந்து ஒரு இலட்சம் டாலர்களையும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் இணைந்து 60 ஆயிரம் டாலர்களையும் உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் இணைந்து 30 ஆயிரம் டாலர்களையும் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



**புகைப்படங்கள்: ஐயா4யு மற்றும் சத்தியன்**










**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் தமிழர் அரசியலில் எழுச்சியும் வீழ்ச்சியும்

## 2025 நடைபெற்று முடிந்த இரண்டு இடைத்தேர்தல்களின் ஆழமான பகுப்பாய்வு




கனடாவில் ஈழத் தமிழரின் அரசியல் பயணம் தொடர்ந்து புதிய உயரங்களை எட்டி வருகிறது. 2025 செப்டம்பர் 29 அன்று ரொறன்ரொ நகரசபையின் 25வது வட்டாரத்திற்கும் மார்க்கம் நகரசபைக்கான 7ம் வட்டாரத்தின் இடைத்தேர்தல்கள், தமிழர் சமூகத்திற்குள் காணப்படும் மாற்றுக் கருத்துக்கருத்துக்களையும் நேர்மையற்ற தன்மையையும் பொருத்தமற்ற தமிழ் பேசும் வேட்பாளர்கள் பதவி ஆசை கொண்டு போட்டியில் குதித்ததும் என பலவிதமான மாறுபட்ட நிலைகளைக் காட்டின. இவ்வாறான நிலையில் ரொறன்ரோ நகரசபைக்கு நீதன் சண்முகராஜா வெற்றிபெற்று நகரசபையில் தமிழர் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்திய நிலையில், மார்க்கம் நகர சபையின் 7ம் வட்டாரத்தில் இரண்டு தமிழர் போட்டியாளர்கள் வாக்கைப் பிரித்ததால் வெற்றி வாய்ப்பு கையிழந்தது. இவை இரண்டும் சேர்ந்து, தமிழர் அரசியல் பங்கேற்பின் சாத்தியங்களையும் சவால்களையும் தெளிவுபடுத்துகின்றன. இதே மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்தில் முன்னர் பல தடவைகள் லோகன் கணபதி மற்றும் யுனிற்றா நாதன் ஆகியோர் வெற்றிபெற்ற தேர்தல்களின்போது ஒரு தமிழ் பேசும் வேட்பாளரே போட்டியில் நின்றார் என்பது குறிப்பிடததக்கது.

29ம் திகதி நடைபெற்ற இரண்டு இடைத்தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன:

-> ரொறன்ரோ நகரசபை — Ward 25 (Scarborough—Rouge Park)
-> நீதன் சண்முகராஜா — 5,174 (26.86%) வெற்றி
-> அனு சிறீஸ்கந்தராஜா — 3,374 (17.58%)
-> ஷான் அல்லன் — 2,834 (15.23%)
-> பிற தமிழர் வேட்பாளர்கள்: சியான் சின்னராசா (1,441), அனித்தா (507)
-> மொத்த வேட்பாளர்கள்: 20 பேர்
-> தகுதி பெற்ற வாக்காளர்கள்: 77,000+
-> வாக்காளர் வருகை: 19,260 (24.9%). (மூன்றில் ஒரு வாக்காளர்கள் மாத்திரமே வாக்களித்துள்ளார் என்பது பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளது.

2018இல் வெற்றியை 154 வாக்குகள் வித்தியாசத்தில் தவறவிட்ட நீதன் சண்முகராஜா, இம்முறை வலுவான சமூக ஆதரவுடனும், தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி வாரியத்தில் பெற்ற அனுபவத்துடனும் மீண்டும் வெற்றி பெற்றார். இதன் மூலம், பார்த்தி கந்தவேலுடன் சேர்ந்து டொரன்டோ மாநகரசபையில் தற்போது இரண்டு தமிழர் உறுப்பினர்கள் உள்ளனர். இது கனடா நகராட்சி அரசியலில் தமிழர் வரலாற்றில் ஒரு முக்கியக் கட்டமாக அமைகிறது.

ஆனால் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார முடிவுகள் வித்தியாசமானவை. இதில் இரண்டு தமிழ் பேசும் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் வெற்றிபெற்ற பெண்வேட்பாளர் பெற்ற வாக்குகளிலும் அதிகமானவை. இது ஒன்றே தமிழ் பேசும் பிரதிநிதித்துவம் இழக்கப் பெற்றதற்கான காரணமாக விளங்குகின்றது. இருவர போட்டியிட்ட நிலையில் சில தமிழர் அமைப்புக்களும் பக்கச்சார்பாக தமிழர்கள் என்ற அடையாளத்தை நிராகரித்து ஆதரவுவழங்கியமை இங்கு கண்டிக்கப்பட வேண்டிதொன்றாகும்.

-> மார்க்கம் நகரசபை — Ward 7
-> நிமிஷா பட்டேல் — 2,954 வெற்றி
-> கிள்ளி செல்லையா — 2,098
-> ஆராணி முருகானந்தம் — 2,055
-> மொத்த வேட்பாளர்கள்: 8 பேர்
-> மொத்த வாக்குகள்: 18,183
-> வாக்காளர் வருகை: 22.3%.

இங்கு எண்ணிக்கைகள் துல்லியமாகச் சில விடங்களைச் சொல்கின்றன. இரண்டு தமிழர் போட்டியாளர்கள் சேர்த்து 4,153 வாக்குகள் (50.7%) பெற்றுள்ளனர். ஆனால் வாக்குகள் பிரிந்ததால், வெற்றி 2,954 வாக்குகளுடன் நிமிஷா பட்டேலுக்குலுக்கு விழுந்துள்ளன. தமிழர் ஆதிக்கம் கொண்டிருந்த இந்த வட்டாரம், வாக்குப் பிரிவினை காரணமாக இரண்டாவது முறை தொடர்ந்து இழக்கப்பட்டுள்ளது கவலைக்குரியதே!

### புள்ளிவிபரப் பார்வையில்

1. குறைந்த வாக்காளர் வருகை: டொரன்டோவில் 25%, மார்க்கத்தில் 22% வரசெழரவ மட்டுமே. தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளிலும் பெரும்பாலானோர் வாக்களிக்கவில்லை.









2. வாக்கின் பயன்முறை (Vote Efficiency): டொரன்டோவில் 20 வேட்பாளர்களுக்கிடையே நீதன் சண்முகராஜா பெற்ற 5,174 வாக்குகள் வெற்றிக்கு போதியது. சமூக ஒருங்கிணைப்பு இங்கு வேலை செய்தது.
3. வாக்குப் பிரிதல் (Vote Splitting): மார்க்கத்தில் தமிழர் பெரும்பான்மை இருந்தும், இரண்டு வேட்பாளர்களுக்குள் போட்டி இருந்ததால் தோல்வி ஏற்பட்டது.
4. பல நிலைகளில் தமிழர் பிரதிநிதித்துவம்: Scarborough—Rouge Park பகுதியில் தற்போது நான்கு தளங்களிலும் தமிழர் கைகள் ஓங்கியுள்ளன - மத்திய, மாகாண, நகராட்சி, கல்விச்சபை ஆகிய நான்கு அரச அமைப்புக்களில் தமிழர் பிரதிநிதித்துவும் நிலைத்திருக்கின்றது.

### கனடாவில் தமிழர் தற்போதைய அரசியல் பிரதிநிதித்துவம்

- மத்திய அரசாங்கம்: கரி ஆனந்தசங்கரி (அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்).
- மாகாணம் (Ontario Provincial): விஜய் தணிகாசலம் (இணை அமைச்சர், MPP). லோகன் கணபதி - மாகாண அமைச்சரவையில் பாராளுமன்றச் செயலாளர் பதவி
- நகராட்சி (Municipal): நீதன் சான் & பார்த்தி கந்தவேல் (Toronto City Councillors).
- கல்விச் சபை: அனு சிறீஸ்கந்தராஜா (Trustee).

இதனால் Scarborough—Rouge Park பகுதி ஒரே இடத்தில், கனடா அரசியலின் நான்கு அடுக்குகளிலும் தமிழர் அதிகாரத்தில் உள்ள அபூர்வமான நிலையை உருவாக்கியுள்ளது.

- வரலாற்றுப் பின்னணி

1980களிலும் 1990களிலும் ஈழத் தமிழர்கள் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தபோது, முதன்மை கவனம் உயிர்வாழ்வு, கல்வி, பொருளாதார நிலைத்தன்மை என்பவையிலேயே இருந்தது. ஆனால் 2000களில் தொடங்கி கல்வி வாரியத் தேர்தல்களிலும் நகராட்சி அரசியலிலும் பங்குபெறத் தொடங்கினர்.

இப்போது, கனடா தமிழர்கள் "புலம்பெயர் சமூகத்திலிருந்து அரசியல் அதிகாரம் பெற்ற சமூகமாக" மாறி வருகின்றனர். இது தேர்தல் வெற்றியை மட்டும் குறிக்கவில்லை தமிழர் அடையாளம், மொழி, கலாச்சாரம், அரசியல் செல்வாக்கு ஆகியவற்றின் நிலைத்தன்மையையும் குறிக்கிறது.

### எதிர்கால சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

1. ஒருங்கிணைப்பு அவசியம்: மார்க்கத்தில் நடந்தது இனி நடக்கக் கூடாது. ஒரே வட்டாரத்தில் ஒரே வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும்.
2. Turnout உயர்த்தல்: 25% turnout தமிழர் அரசியல் வலிமையை பிரதிபலிக்கவில்லை. அடுத்த தேர்தலில் 40% குறைந்தபட்ச இலக்காக வாக்களிப்பில் இருக்க வேண்டும்.
3. அரசியல் பயிற்சி: இளம் தலைமுறைக்கான தமிழர் அரசியல் பயிற்சி மையம் உருவாக்கப்பட வேண்டும்.
4. கூட்டணி அரசியல்: பிற குடியேற்ற சமூகங்களுடனும் கூட்டணி அமைத்தால் தமிழர் செல்வாக்கு விரிவடையும்.
5. தமிழ் ஊடக பங்கு: தேர்தல் செய்திகள் மட்டுமல்லாது, அரசியல் விழிப்புணர்வு, விவாதங்கள், கல்வி ஆகியவற்றையும் முன்னெடுக்க வேண்டும்.

### 2025 இடைத்தேர்தலில் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள்

-> டொரன்டோவின் வெற்றி: ஒருங்கிணைப்பு இருந்தால் வெற்றி சாத்தியமென்பதை நீதன் சான் நிரூபித்தார்.
-> மார்க்கத்தின் தோல்வி: வாக்குப் பிரிவினை இருந்தால் பெரும்பான்மை வாக்குகள் இருந்தாலும் தோல்வி தவிர்க்க முடியாது.
-> இரண்டு பாடங்களும் தெளிவாகச் சொல்கின்றன: "ஒன்றிணைந்தால் வெற்றி, சிதறினால் தோல்வி."

### 2026 நோக்கிய திட்டங்கள்

அடுத்த ஆண்டு நடைபெறும் பொதுத் தேர்தலுக்கான திட்டங்கள்:
-> ஒருங்கிணைப்பு கவுன்சில்: ஒரே வேட்பாளர் தேர்வு செய்ய தமிழர் சமூக ஆலோசனைகள்.
-> GOTV இயக்கம்: வாக்காளர்களை வாக்களிக்கச் செய்வதற்கான தீவிர பிரசாரம்.
-> தரவு சார்ந்த தேர்தல் திட்டம்: குறைந்த வாக்களிப்பு உள்ள தமிழ் பகுதிகளை இலக்கு வைப்பது.
-> இளைஞர் பங்கேற்பு: தன்னார்வம், internship, campaign அனுபவம் மூலம் அரசியலுக்குத் தயாராக்குதல்.

2025 இடைத்தேர்தல்கள் தமிழர் சமூகத்திற்கு வெற்றியும் எச்சரிக்கையும் ஒன்றாக வழங்கியுள்ளன.

-> ரொற்ரோவில் நீதன் சான் வெற்றி, தமிழர் குரலை வலுப்படுத்தியது.
-> மார்க்கத்தில் தோல்வி, ஒருங்கிணைப்பு இல்லையேல் அந்தக் குரல் மங்கக்கூடும் என்பதைக் காட்டியது.

எனவே, 2026 தேர்தலுக்கான ஒரே பாதை:
ஒற்றுமை + திட்டமிடல் + turnout உயர்த்தல் + ஒருங்கிணைந்த வேட்பாளர்.

இதன் மூலம், கனடா தமிழர் வரலாறு புதிய உச்சியை அடையும் வெறும் பங்கேற்பாளர்களாக அல்லாது, அரசியலை வடிவமைக்கும் சமூகமாக மாறுவார்கள்.

**எழுதியவர்: ஈழத்துத் நிலவன்**
**தமிழ் தேசிய வரலாற்றாசிரியர் | உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ ஆய்வாளர்**
30-09-2025



# மன்னார்த் தீவில் காற்றாலை வேண்டுமா? வேண்டாமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

மன்னாரில் குறிப்பாக மன்னார்த் தீவுப் பகுதியில் காற்றாலைகள் நிறுவப்படுவதற்கு எதிராக அங்குள்ள திருச்சபையினரும் பொதுமக்களும் கடுமையாக எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள். கடந்த திங்கட்கிழமை அங்கே கடை முடக்கமும் ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.

இந்த போராட்டங்களின் ஒரு பகுதியாக சில வாரங்களுக்கு முன்பு கத்தோலிக்க திருச்சபையின் மறை மாவட்ட ஆயர் ஜனாதிபதியைச் சந்தித்திருந்தார். சந்திப்பின்போது அவர் மன்னாரில் நிகழும் கனிமவள அகழ்வு மற்றும் காற்றாலைத் திட்டங்கள் போன்றவற்றைக் குறித்துப் பேசியதாக அறிய முடிகிறது.

தவிர, அவர் கதைத்ததாகக் கூறப்படும் மற்றொரு விடயம் ஊடகங்களில் சர்ச்சையாக மாறியது. அது என்னவெனில், மன்னார் ஆஸ்பத்திரியை தரம் உயர்த்த வேண்டும் என்றும், அதனால் அதனை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டதாக வந்த தகவல்தான்.

மன்னார் ஆஸ்பத்திரி மாகாண அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது. அதனை மத்தியிடம் கொடுப்பது என்பது அல்லது மத்தி அதனை எடுக்குமாறு கேட்பது என்பது ஏற்கனவே மாகாணத்துக்குள்ள அதிகாரத்தை மத்திக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதற்குச் சமம். தமிழ் மக்கள் தன்னாட்சி அதிகாரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டம்.

மன்னாரில் கனிமவள அகழ்வு, காற்றாலை, கடலட்டை போன்றன தமிழ் மக்கள் தங்களுடைய கடலின் மீதும் நிலத்தின் மீதமுள்ள அதிகாரத்துக்கு ஏற்பட்ட சவால்கள்தான். அபிவிருத்தி என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உரிமை. அது பசுமை அபிவிருத்தியாக இருந்தாலும் கூட. எதை அபிவிருத்தி செய்வது? எங்கே செய்வது? எப்பொழுது செய்வது? எப்படிச் செய்வது? யாரை வைத்துச் செய்வது? போன்ற விடயங்களைத் தீர்மானிப்பதற்கு வேண்டிய கூட்டு அதிகாரங்களைக் கேட்டுத்தான் தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள். இவ்வாறு தமது நிலத்தின் மீதும் கடல் மற்றும் காட்டின் மீதும் தமக்குள்ள அதிகாரத்தைக் கேட்டுப் போராடும் ஒரு மக்கள் கூட்டம், ஏற்கனவே தனக்கு வழங்கப்பட்ட அற்ப சொற்ப அதிகாரத்தையும் மத்தியிடம் திருப்பிக் கொடுக்க முற்படுவது என்பது கனிமவள அகழ்வு மற்றும் காற்றாலைகளுக்கு எதிரான போராட்டத்தைப் பலவீனப்படுத்த கூடியது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அவ்வாறு அனுரவிடம் வேண்டுகோள் விடுத்ததாகச் செய்திகள் வந்த பின் மன்னாரில் நடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் அந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. அதனை நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவிகரனும் சத்தியலிங்கமும் மறுத்துப் பேசியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில்,மன்னார் மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதற்கு தேவையான பெருந்தொகை நிதியை தருவதற்கு இந்தியா தானாக முன்வந்தது. மன்னாரிலும் முல்லைத்தீவிலும் உள்ள இரண்டு ஆஸ்பத்திரிகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவி செய்ய முன் வந்திருப்பதை ம்பந்தப்பட்ட அமைச்சர் கடந்த வாரம் உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு ஆஸ்பத்திரி விவகாரம் ஒரு சர்ச்சையாக கிளம்பியிருந்த ஒரு பின்னணிக்குள், மறை மாவட்ட ஆயர் ஐரோப்பாவில் சுற்றிப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், ஜனாதிபதி அனுரகுமாரவும் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருந்த அதே காலகட்டத்தில், மன்னார் தீவுப் பகுதியில் காற்றாலைகளை நிறுவுவது என்ற தனது முடிவை அரசாங்கம் அறிவித்திருந்தது.

அவ்வாறு காற்றாலைகளை நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் தீவப்பகுதிக்குள் கொண்டுவரப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு கடந்த 26ஆம் திகதி இரவு அப்பகுதி மக்களும் கத்தோலிக்க மதகுருமாரும் தீவின் வாயிலில் நின்று போராட்டம் நடத்திய பொழுது, அவர்கள் மீது போலீசார் பலப்பிரயோகத்தை மேற்கொண்டார்கள். இதில் பெண்களும் மத குருமார்களும் தாக்கப்பட்டார்கள், அவமதிக்கப்பட்டார்கள். இதன் விளைவாக அங்குள்ள மக்கள் கடந்த திங்கட்கிழமை பொதுமுடக்கத்துக்கும் ஆர்ப்பாட்டத்துக்கும் அழைப்பு விடுத்திருந்தார்கள்.

மன்னாரில் கடந்த பல மாதங்களாக கனிமவள அகழ்வுக்கு எதிராகவும் காற்றாலை நிறுவப்படுவதற்கு எதிராகவும் போராட்டம் நடந்து வருகிறது. இப்போராட்டத்தில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் பங்கு பற்றி வருகிறார்கள். குறிப்பாக கனிமவள அகழ்வுக்கு எதிரான போராட்டத்தில் யாருமே கேள்விகளை எழுப்புவதில்லை. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற அபிப்பிராயம் எல்லாத் தரப்புக்களிடமும் உண்டு. ஆனால் காற்றாலை விடயத்தில் அங்கு போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் முன்வைக்கும் கருத்துக்கள் விஞ்ஞானபூர்வமானவை அல்ல என்ற ஒரு விமர்சனம் ஒரு பகுதி தமிழ் மக்கள் மத்தியிலேயே உண்டு.

மன்னார் தீவில் காற்றாலைகள் நிறுவப்பட்டதன் பின்னர் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மழைக் காலங்களில் தங்களுடைய வீடுகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதாக முறைப்பாடு செய்கின்றார்கள். இந்த முறைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் கடந்த வாரம் அப்பகுதியில் காற்றாலைகளை நிறுவுவது என்ற தனது முடிவை அரசாங்கம் மீள உறுதிப்படுத்தியது.

நாட்டின் அனல் மின் நிலையங்கள் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தானவை என்பதனால் மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டங்களை அரசாங்கம் நிறுவி வருகின்றது. இந்த அடிப்படையில் ஏற்கனவே வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வீடுகளின் கூரைகளில் சூரிய மின்கலங்கள் கடன் அடிப்படையில் பொருத்தப்பட்டு வருகின்றன. இந்த மின்கலங்களை பொருத்துவதன் மூலம் குறிப்பிட்ட பயனாளி முதலாவதாக மீளப் புதுப்பிக்கும் எரிசக்தி திட்டத்திற்கு தன்னாலான பங்களிப்பைச் செய்கின்றார். இரண்டாவதாக அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் அவர் லாபமடைகிறார். அந்த வருமானம் அவருடைய வீட்டுத் தேவைகளுக்கான மின் பாவனைக் கட்டணத்தை முழுமையாக இல்லாமல் செய்கின்றது.

அது தவிர, மாதாமாதம் மேலதிகமாக லாபமும் கிடைக்கும். இவ்வாறு கூரையில் விழும் சூரிய வெளிச்சத்தைக் காசாக்கும் விடயத்தில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் அதிகரித்த ஆர்வத்தோடு காணப்படுகிறார்கள். கூரைகளில் பதிக்கப்படும் சூரிய மின்கலன்கள் சில சமயங்களில் கூரையின் வெளிப்புறத் தோற்றத்தை, அழகைக் கெடுக்கின்றன என்ற அழகியல் நோக்கு நிலையிலான விமர்சனமும் உண்டு. அழகாக, நவீனமாக வீட்டைக் கட்டிவிட்டு அந்த வீட்டின் கூரையில் அந்தக் கூரையின் தோற்றத்துக்குப் பொருத்தமே இல்லாத விதத்தில் ஒரு பொருந்தாத கொண்டையைப் போல துருத்திக் கொண்டு நிற்கும் சூரிய மின்கலங்களை பொருத்துவது என்பது, அந்த வீட்டின் ஒட்டுமொத்த வெளித்தோற்ற அழகையே கெடுக்கக் கூடியது. இதுதொடர்பாக ஏற்கனவே நான் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன்.

இந்த விடயத்தில் வீட்டின் அழகிய தோற்றமா அல்லது சூரிய ஒளியை விற்றுக் கிடைக்கும் காசா என்ற கேள்வி வரும்பொழுது படித்த யாழ்ப்பாணத்தவர்கள் அதிகம் லாபத்தையே பார்ப்பதாகத் தெரிகிறது. எனினும் அந்த லாப நோக்கமானது அவர்களை அறியாமலேயே பசுமை மின்சக்தித் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

உலகம் முழுவதும் பசுமை மின்சக்தி திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக வளர்ச்சி அடைந்த நாடுகளில் காற்றாலைகள் வெற்றிகரமாக நிறுவப்பட்டு வருகின்றன. அண்மையில் ஸ்பெயின் நாடானது நாட்டின் ஒருநாள் மொத்த மின் பாவனையை முழுக்கமுழுக்க பசுமை மின்சக்தியின் மூலம் பூர்த்தி செய்து சாதனை செய்திருக்கிறது.

மேலும், ஐரோப்பாவில் காற்றாலைகள் தொடர்பாக வந்த விமர்சனங்களை உள்வாங்கி புதிதுபுதிதாக மாற்று ஏற்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. குறிப்பாக காற்றாலை விசிறிகளில் பட்டு வலசைப் பறவைகள் இறப்பது தொடர்பான விமர்சனத்தை உள்வாங்கி செட்டைகள் இல்லாத காற்றாடிகள் எப்பொழுதோ உருவாக்கப்பட்டு விட்டன. ஜெர்மனி இந்த விடயத்தில் முன்னோடியாகக் காணப்படுகிறது. அதுபோலவே அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆய்வின்படி காற்றாலைகளின் செட்டைகளில் ஒன்றைக் கறுப்பாக்கினால் அங்கே கொல்லப்படும் பறவைகளின் எண்ணிக்கை 70% தால் குறையும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு காற்றாலை மின் சக்தியின் சூழல்நேயப் பண்பை மேலும் மேம்படுத்தும் நோக்கத்தோடு ஐரோப்பா முன்னேற்றகரமான புதிய காற்றாடிகளைக் கண்டுபிடித்து வருகிறது. இப்படிப்பட்டதோர் உலக மற்றும் உள்நாட்டுச் சூழலில், மன்னார் மக்கள் ஏன் காற்றாலைகளை எதிர்க்கிறார்கள் என்று ஒரு பகுதியினர் கேள்வி கேட்கின்றார்கள்.

இங்கே முக்கியமாக இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். மன்னார் மக்கள் மன்னாரின் தீவுப்பகுதியில் காற்றாலைகள் நிறுவப்படுவதைத்தான் எதிர்க்கிறார்கள். யாரும் சூரிய மின்கலங்களை எதிர்ப்பதாகத் தெரியவில்லை.

இந்த விடயத்தில் காற்றாலை தொடர்பான மன்னார்த் தீவு மக்களின் கவலைகளை சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள், அதிகாரிகள், மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்றவர்கள் கேட்கவேண்டும். இதில் மாற்று ஏற்பாடு ஏதும் உண்டா என்று சிந்திக்க வேண்டும்.

காற்றாலைகள் ஏன் வேண்டாம் என்பதற்கு மன்னார் தீவுப்பகுதி மக்கள் கூறும் காரணங்கள் எவையாகவும் இருக்கலாம். ஆனால் காற்றாலைகள் ஏன் வேண்டும் என்பதற்குக் கூறப்படும் பிரதான காரணத்திலிருந்து சிந்தித்தால் அந்த மக்களின் பயத்தைப் போக்க வேண்டியது அவசியம். சூழல்நேய அபிவிருத்தித் திட்டங்கள் எவையும் அந்தச் சூழலில் வாழும் மக்களின் பங்களிப்போடு உருவாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சூழலுக்கு அந்த அபிவிருத்தித் திட்டம் முழுமையாக நேசமானதாக அமையும். அந்த மக்களின் விருப்பமின்றி அதை அங்கே பலவந்தமாக நிறுவ முடியாது. அப்படி நிறுவினால் சூழல்நேய அபிவிருத்தி என்ற அடிப்படைச் சிந்தனை கேள்விக்குள்ளாகிவிடும். எனவே ஒரு பகுதி மக்கள் அதை எதிர்க்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய பயங்களை, கவலைகளைப் போக்க வேண்டிய, மாற்று ஏற்பாடுகளைக் குறித்துச் சிந்திக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் உண்டு.

மன்னாரில் காற்றாலைகளை முதலில் நிறுவ முற்பட்டது அதானி குழுமம் ஆகும். ஆனால் அது தொடர்பான லாப நட்டப் பேரங்களில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அதானி குழுமம் அந்த உடன்படிக்கையில் இருந்து வெளியேறி விட்டது. இப்பொழுது உள்நாட்டு நிறுவனம் ஒன்று காற்றாலைகளை நிறுவ முயற்சிக்கின்றது.


இங்கு ஒரு சுவாரசியமான அரசியல் முரணைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதானி குழுமம் மன்னாரில் காற்றாலைகளை நிறுவ முற்பட்ட பொழுது அதனை ஜேவிபியும் உட்பட அரகலய போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் எதிர்த்தார்கள். காலி முகத்திடலில் “கோட்டா கோகம” கிராமத்தில் இந்திய விஸ்தரிப்பு வாதத்துக்கு எதிராக ஒரு பதாகை கட்டப்பட்டிருந்தது. அது அதானி குழுமத்தின் முதலீடுகளை எதிர்த்தது. இது தொடர்பாக ஒரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் அந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற ஒரு கத்தோலிக்கம் மதகுருவோடு உரையாடினார். “நீங்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராக போராடுகிறீர்கள் என்று சொன்னால், ஜேவிபியின் முன்னைய நிலைப்பாடுகளில் ஒன்றைத் தொடர்ந்து பின்பற்றுகிறீர்கள் என்று பொருள். ஜேவிபியின் முன்னைய நிலைப்பாட்டின்படி மலையகத் தமிழர்களை அவர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியாகக் கண்டார்கள். அப்படியென்றால் அரகலயப் போராட்டமும் மலைகத் தமிழர்களை எதிரிகளாகப் பார்க்கின்றதா?” என்று அவர் கேட்டார்.

(தொடர்ச்சி 17 பக்கம்)

# தமிழர் மனங்களில் ஆழவேரூன்றிய சினிமா மோகம்:

## ஓர் உளவியல் மற்றும் அரசியல் பகுப்பாய்வு

**எழுதியவர்: ஈழத்து நிலவன்**
**தமிழ் தேசிய வரலாற்று ஆய்வாளர்**
**உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ பகுப்பாய்வாளர்**
02-10-2025





சமீபத்தில் தமிழ்நாட்டில் அரங்கேறிய துயரச் சம்பவங்கள், தமிழ்ச் சமூகம் திரைப் பிரபலங்கள் மீது கொண்டிருக்கும் அசுரத்தனமான மோகத்தின் அபாயகரமான விளைவுகளை உலகறியச் செய்துள்ளது. இது வெறும் தனிப்பட்ட நடிகரின் மீதான ஈர்ப்பு அல்ல் மாறாக, தங்கள் மொழி, இனம், பண்பாடு மற்றும் அரசியல் உரிமை குறித்துச் சிந்திக்காமல், தமிழர்கள் "குறிப்பாக இளைஞர்கள்" எவ்வளவு ஆழமான உளவியல் பாதிப்பிற்கு உள்ளாகி, கற்பனை உலகிலேயே மூழ்கிப் போயிருக்கிறார்கள் என்பதற்கான வெளிப்படையான சான்று.

சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் பாதித்துள்ள இந்த சினிமா மோகம், தமிழர்களின் எதிர்கால இருப்புக்கே அச்சுறுத்தலாக மாறி வருகிறது. இந்தக் கட்டுரை, சினிமா மோகத்தில் தமிழர்கள் பின்தங்கியிருக்கும் நிலையை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து, இந்தச் சிதைவை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்துவது, இனிவரும் காலங்களில் நாம் செய்ய வேண்டியது என்ன என்பது குறித்து ஆராய்கிறது.

### சினிமா மோகத்தில் பின்தங்கிய தமிழர் சமூகம்: உளவியல் தாக்கம்

தமிழகத்தின் வளர்ச்சி, கல்வி மற்றும் சுகாதாரக் குறியீடுகளில் (NITI Aayog தரவுகள் சுட்டிக்காட்டுவது போல) முன்னேற்றம் கண்டுள்ள போதிலும், மக்கள் திரைப் பிரபலங்களின் பின்னால் உணர்ச்சிவயப்பட்டுக் கும்பலாகச் செல்வது முரண்பாடாக உள்ளது. மற்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களில் காணப்படாத இந்த உளவியல் பிணைப்பிற்குப் பின்னால் உள்ள காரணங்கள் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை:




- உண்மையான தலைமைக்கான வெற்றிடம்: பல தசாப்தங்களாக, அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் மீதான நம்பிக்கை குறைந்ததன் விளைவாக, தமிழர்கள் தங்கள் வெற்றிடத்தை நிரப்ப திரைப் பிரபலங்களைத் தேடத் தொடங்கினர். தங்கள் கஷ்டங்களுக்கான தீர்வுகளை நிஜ வாழ்க்கையில் தேடாமல், திரையில் வரும் "நாயக பிம்பங்களிடம்" இருந்து தேட ஆரம்பித்ததன் விளைவே இது.


- போலிக் கொண்டாட்டம் மற்றும் அங்கீகாரத் தேடல்: இளைய சமுதாயம், நிஜ வாழ்வில் சாதித்தவர்களைக் கொண்டாடுவதை விட, சினிமா பிரபலங்களுக்காக முண்டியடிப்பதையே தங்கள் அடையாளமாகவும், வீரச் செயலாகவும் கருதுகிறது. சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களின் அதீத கவனம், இந்தக் கொண்டாட்டத்தை மேலும் ஊக்கப்படுத்தி, இது ஒரு "தேசிய கடமை" போன்ற மாயையை ஏற்படுத்துகிறது.

- ஊடகங்களின் பொறுப்பற்றப் பங்கு: தொலைக்காட்சி ஊடகங்கள் தங்கள் டி.ஆர்.பி. (TRP) இலாபத்திற்காக சினிமா செய்திகளை நாள் முழுவதும் செயற்கையாகப் பெரிதுபடுத்துகின்றன. எந்தவிதமான சமூகப் பொறுப்பும் இல்லாமல், உணர்ச்சிவசப்படும் ரசிகர்களைப் பேட்டி கண்டு, அந்தக் காட்சிகளைத் திரும்பத் திரும்ப ஒளிபரப்புவது, இந்த மோகத்தைத் தூண்டும் ஒரு பிரதான செயல்திட்டமாக உள்ளது. இது சமூகத்தின் மனநிலையைச் சிதைத்து, வன்முறைக்கும் துயரத்திற்கும் இட்டுச் செல்கிறது.

### வருங்கால தலைமுறையும் தமிழர்களின் இருப்பும் சிதைவுறுதல்

சினிமா மோகம் ஏற்படுத்தும் பேரழிவு தனிப்பட்ட உயிரிழப்புகளோடு நின்றுவிடுவதில்லை. இது வருங்காலத் தலைமுறையையும், ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தின் இருப்பையும், அரசியல் பலத்தையும் சிதைக்கவல்லது.

- அரசியல் சிதைவு: ஒரு நாட்டின் அரசியல் தலைவர்கள் என்பவர்கள் அதன் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் நிர்வாகத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால், திரை மோகத்தால் ஆழம் பார்க்காமல், வெறும் பிம்பத்தை வைத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அது அரசியல் தளத்தை அற்பமாக்கி விடுகிறது. இத்தகைய தலைவர்கள் கொள்கை சார்ந்த அரசியல் முடிவுகளை எடுப்பதை விட, தங்கள் பிம்பத்தைக் காப்பதற்கே முன்னுரிமை அளிப்பார்கள்.




- பண்பாட்டுப் பின்னிடைவு: இனம், மொழி, தமிழ் தேசிய வரலாற்று குறித்த ஆழ்ந்த சிந்தனை இளைஞர்களிடம் இருந்து விலகிச் செல்கிறது. அவர்கள் நிஜமான சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்வதை விட்டுவிட்டு, திரைப் பிரபலங்களின் வருகைக்காக மணிக்கணக்கில் காத்திருக்கிறார்கள். இந்த மனநிலை, அரசியல் உரிமைக்கான போராட்டங்கள், பொருளாதாரச் சீர்திருத்தங்கள், கல்வி மேம்பாடு போன்ற முக்கியமான விஷயங்களில் இருந்து தமிழர்களை விலக்கி வைக்கிறது.

- சமூக அவமானம்: உலகின் பல முன்னேறிய நாடுகள் தங்கள் விஞ்ஞானிகள், பொருளாதார வல்லுநர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மூலம் உலக அரங்கில் மதிக்கப்படும்போது, தமிழர்களோ ஒரு திரைப் பிரபலத்தின் மீதான வெறித்தனமான மோகத்தால் ஏற்பாடு செய்யும் துயரங்களால் சர்வதேச அளவில் பழிச்சொல்லுக்கு ஆளாகிறோம். இது தமிழர் சமூகத்தின் அறிவுசார்ந்த அடையாளத்தை முற்றிலுமாகச் சிதைக்கிறது.

### தமிழர் காலாகிய நாம் செய்ய வேண்டியது என்ன?

இந்த ஆழமான சமூகச் சிதைவைத் தடுத்து நிறுத்தி, தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுக்க தமிழர் காலாகிய நாம் உடனடியாகவும், நீண்ட கால அடிப்படையிலும் செயல்பட வேண்டியது அவசியம்.

1. உளவியல் விழிப்புணர்வும் கல்வியும்:

- விமர்சனப் பகுப்பாய்வுத் திறன்: பள்ளி மற்றும் கல்லூரிப் பாடத்திட்டங்களில், ஊடகங்களையும், அரசியலையும் விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்யும் திறன்களை வளர்ப்பதற்கான கல்வி முறையை ஊக்குவிக்க வேண்டும்.
- உளவியல் ஆதரவு: இளைஞர்கள் மத்தியில் சினிமா மோகத்தால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, நிஜ வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள அவர்களுக்குச் சமூக மற்றும் உளவியல் ஆதரவை வழங்க வேண்டும்.

2. ஊடகங்களுக்குப் பொறுப்புணர்வு:

- TRP-ஐ மறுப்பது: சமூகத்திற்குத் தீங்கான செய்திகளைப் புறக்கணித்து, உண்மையான அரசியல் விவாதம், சமூகச் சீர்திருத்தங்கள், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டுப் பெருமைகளைப் பேசும் மாற்று ஊடகங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். பொறுப்பற்ற ஊடகங்களை மக்கள் புறக்கணிப்பதே அவர்களுக்கு நாம் அளிக்கும் மிகச்சிறந்த பாடம்.



3. ஆழமான அரசியல் ஈடுபாடு:

- கோட்பாடுகளைக் கொண்டாடுதல்: கொள்கை, கோட்பாடு, சமூக நீதி, இன உரிமை போன்றவற்றிற்காகப் போராடும் தலைவர்களையும், இயக்கங்களையும் நாம் தூக்கிப் பிடித்துக் கொண்டாட வேண்டும். நடிகர்களின் பிம்பங்களை நிராகரித்து, நிஜமான அரசியல் செயல்பாடுள்ள தலைவர்களை மட்டுமே ஆதரிக்க வேண்டும்.

- தமிழ் தேசியச் சிந்தனை: தமிழர் என்ற இனத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், தனித்துவமான அரசியல் உரிமைகளையும் ஆழமாக உணர்ந்து, அடுத்த தலைமுறையினருக்கு அதன் அவசியத்தைப் போதிக்க வேண்டும். நாம் எந்தச் சித்தாந்தத்தை நோக்கிச் செல்கிறோம் என்ற தெளிவான அரசியல் பார்வை ஒவ்வொரு தமிழருக்கும் வேண்டும்.

### இனிவரும் காலங்களில் தமிழர்களாகிய நாம்

சினிமா மோகத்தின் அபாயகரமான விளைவுகளிலிருந்து விடுபட்டு, வருங்காலத் தலைமுறையினருக்கான வலுவான சமூகத்தை உருவாக்க, நாம் ஒவ்வொருவரும் ஒரு மாற்றத்தின் கருவியாகச் செயல்பட வேண்டும்.

இனிவரும் காலங்களில், தமிழர் என்ற அடையாளம் வெறும் சினிமாவில் தேடப்படுவதை விடுத்து, உலக அரசியல், பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியான பகுப்பாய்வுத் திறன் கொண்ட ஒரு அறிவுசார் சமூகமாக நாம் உருவெடுக்க வேண்டும். நம் ஆற்றலையும் கவனத்தையும் நடிகர்களின் வெற்றிக் கொண்டாட்டங்களுக்குச் செலவிடாமல், தமிழ்ப் பண்பாட்டுக் காவலர்களாகவும், அரசியல் உரிமைகளுக்கான போராளிகளாகவும், நவீன உலகின் அறிவுச் சுடர்களாகவும் உருவெடுக்க நாம் உறுதியேற்க வேண்டும்.

சினிமா மோகம் என்னும் புதைகுழியில் இருந்து மீண்டு, நிஜமான வரலாற்றுச் சாதனைகளை நிகழ்த்த வேண்டிய காலம் இது.

# தமிழ் தேசிய அரசியலில் ஒரு “கோயபல்ஸ்”



**“ஒரு பொய்யை உண்மை என நம்ப வைக்கும் வரை அதைப்பற்றி திரும்ப திரும்ப உரத்த குரலில் பேச வேண்டும் என்பது தான் கோயபல்ஸின் தத்துவம். ஒரு பொய்யை உணர்வு பூர்வமாக எடுத்துரைத்து அதை உண்மை என நம்பவைப்பதில் உலகத்தில் கோயபல்ஸை மிஞ்சிய ஆள் இல்லை என்பதுதான் இதுவரையான முடிவு. மதிமயக்கும் தனது பேச்சாற்றலால் கற்பனைக்கும் எட்டாத பல பொய்களை உண்மை என நம்ப வைத்த ஏமாற்றுப் பேர்வழியான கோயபல்ஸுக்கே அப்பனாக தற்போது வந்திருப்பவர்தான் தான் இந்த அர்ச்சுனா இராமநாதன் எம்.பி.”**

**--- கே.பாலா ---**

தமிழ் தேசிய அரசியலில் தமிழ் தேசியவாதிகள், நேர்மையான அரசியல்வாதிகள், எதிரிகள், துரோகிகள், குழிபறிப்போர், கழுத்தறுப்போர், காட்டிக் கொடுப்போர், தலைக்கனம் பிடித்தோர், தலையில் ஒன்றும் இல்லாதவர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் கடந்த 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வரை இருந்துள்ளார்கள். ஆனால் அதுவரை இல்லாத ஒரு புதுவரவாக, புதிய வகை அரசியல்வாதியாக “அண்டப்புளுகன் ஆகாசப் புளுகனாக” பொய்யும் புரட்டும் நிறைந்த அரசியல்வாதியாக உருவெடுத்து இன்று தமிழ் தேசிய அரசியலையே நாறடித்துக்கொண்டும் தமிழினத்தையே தலைகுனிய வைத்து கொண்டுமிருக்கின்றார் சுயேட்சைக்குழு 17இன் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி. யுமான டொக்டர் அர்ச்சுனா இராமநாதன்.

ஒரு பொய்யை உணர்வு பூர்வமாக எடுத்துரைத்து அதை உண்மை என நம்பவைப்பதில் உலகத்தில் கோயபல்ஸை மிஞ்சிய ஆள் இல்லை. மதிமயக்கும் தனது பேச்சாற்றலால் கற்பனைக்கும் எட்டாத பல பொய்களை உண்மை என நம்ப வைத்த ஏமாற்றுப் பேர்வழி தான் இந்த கோயபல்ஸ். ஜெர்மனில் ஹிட்லரின் நாஜி கட்சியில் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த கோயபல்ஸ், பொதுக் கூட்டங்களில் வாயை திறந்தாலே வண்டி வண்டியாக பொய்மூட்டைகளை அவிழ்த்து விடக்கூடியவர். ஒரு பொய்யை உண்மை என நம்பவைக்கும் வரை அதைப்பற்றி திரும்ப திரும்ப உரத்த குரலில் பேச வேண்டும் என்பது தான் கோயபல்ஸின் தத்துவம். இதைத் தான் ஹிட்லருக்காக செய்து வந்தார் அவர். தனது தந்திரமான பேச்சால் மக்களை ஏமாற்றியவர். தாம் சொல்வது வடிகட்டிய பொய் தான் என்றாலும் அதை நயமாக எடுத்துரைத்து திரும்ப திரும்ப அதைப்பற்றி பேசி அதைக்கேட்டவர்கள் அனைவரையும்

“அட உண்மைதாம்பா” என நினைக்க வைத்துவிடுவார். மக்களிடம் எந்த மாதிரி பேசினால் அவர்களுக்குள் தனது பொய்யை உண்மை என விதைக்க முடியும் என்ற வித்தையை கற்று வைத்திருந்தார் கோயபல்ஸ். அவ்வாறான கோயபல்ஸுக்கே அப்பனாக இருப்பவர்தான் இந்த அர்ச்சுனா இராமநாதன் எம்.பி.

அர்ச்சுனா இராமநாதன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய நிலையில் 2024 ஜூலை மாதம், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இடம்பெற்ற முறைகேடுகளையும் ஒழுங்கீனங்களையும் சமூக ஊடகத் தளங்கள் மூலம் அம்பலப்படுத்தி தலைப்புச் செய்திகளில் இடம்பெற்றார். அதன்பின்னர் மன்னார் வைத்தியசாலையில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பிலும் தலையிட்டு மக்கள் மனம் வென்றார். இதன் மூலம் அர்ச்சுனா ஒரு பிரபலமான நபராக அடையாளப்படுத்தப்பட்டார். இதன் விளைவாக அவர் அரசியலுக்குள் நுழைந்தார்.

ஆனால் ஒரு மருத்துவராக நேர்மையானவராக இருந்த அர்ச்சுனாவால் ஒரு அரசியல்வாதியாக அப்படி இருக்க முடியவில்லை. மிகவும் கீழ்த்தரமான, தமிழ் மக்களை அடி முட்டாள்களாக நினைத்துக்கொண்டும், புலம்பெயர்ந்தவர்களின் ஈழ தேசம் மீதான ஈடுபாட்டை, அர்ப்பணிப்பை தனது மூலதனமாக்கி அவர்களை பணம் காய்க்கும் மரங்களாக பயன்படுத்திக்கொண்டும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தனது “தெய்வம்” என கூறிக்கொண்டும் தமிழினத்தையும் தமிழினத்திற்குரிய தன்மானத்தையும் விற்றுப்பிழைக்கும் அசிங்க அரசியலில் ஈடுபடுகின்றார். அதற்கான சில உதாரணங்கள்.

2024 நவம்பரில் சுயேச்சைக் குழு 17 என்ற அரசியல் குழு ஒன்றை அமைத்து, அதன் மூலம் 2024பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு 27,855 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானார். அவ்வாறு தெரிவாவதற்கு முன்னரே அர்ச்சுனா தேசிய மக்கள் சக்தியின் வடக்கிற்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளரான பெண் ஒருவருடன் தேசிய மக்கள் சக்திக்கு தான் ஆதரவளிக்க விரும்புவதாக பேரம்பேசினார், ஆனால் அந்த ஒருங்கிணைப்பாளர் “முதலில் நீங்கள் உங்களை மூளையை பரிசோதியுங்கள்” எனக்கூறி நிராகரித்தார். இது தொடர்பான தொலைபேசி உரையாடல் பதிவும் வெளியானது.

இதனையடுத்து சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாகக் கூறி அழையா விருந்தாளியாக ஐக்கிய மக்கள் சக்தியின் கிண்ணியா பிரசாரக் கூட்டத்தில் அர்ச்சனா மேடையேறிய போது சஜித் பிரேமதாசாவினால் மேடையிலிருந்து இறக்கப்பட்டார். அதனையடுத்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஆதரவளிப்பதாகக்கூறி அதன் ஆடையையும் அணிந்து கொண்டு திரிந்தார். ஆனால் அவர்களும் ஏற்க மறுக்கவேதான் சுயேச்சையாக தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலில் போட்டியிட முன்னரே இவ்வளவு பேரம் பேசுதல்களையும் அர்ச்சகனா செய்தபோதும் அவர் மீது நம்பிக்கை வைத்தே தமிழ் மக்கள் குறிப்பாக தென்மராட்சி மக்கள் அவரை தேர்தலில் வெற்றி பெற வைத்தனர்.

பாராளுமன்றத்தேர்தல் நடந்து முதன் முதலாக பாராளுமன்றம் கூடிய போது எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசாவின் ஆசனத்தில் அமர்ந்து தனது கோமாளித்தன அரசியலை ஆரம்பித்தார். “பாராளுமன்றம் கூடும் முதல் நாள் என்றாலும் ஜனாதிபதி, பிரதமர் எதிர்கட்சித் தலைவருக்கு எனக் குறிப்பிட்டு ஆசனங்கள் ஒதுக்கப்படும் அதில் நீங்கள் அமர முடியாது” என பாராளுமன்ற உதவியாளர்கள் எவ்வளவோ கூறியபோதும் அந்த ஆசனத்திலிருந்து எழுந்திருக்க அர்ச்சுனா எம்.பி. மறுத்தார். இது மறு நாள் ஊடகங்களில் அர்ச்சுனா எம்.பி.யின் கோமாளித்தனம் என்றவாறாக செய்திகளில் இடம்பிடித்தது.

இந்நிலையில் எதிர்கட்சித்தலைவரின் ஆசனத்தில் அமர்ந்தது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் விளக்கமளித்த அர்ச்சுனா எம்.பி, “நான் ஒன்றும் பாராளுமன்ற விதி முறை தெரியாமல் எதிர்கட்சித்தலைவரின் ஆசனத்தில் அமரவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் கிண்ணியா பிரசாரக்கூட்ட மேடையில் நான் ஏறியபோது இந்த சஜித் பிரேமதாசா என்னை மேடையின் ஆசனத்தில் அமரவிடாது பலவந்தமாக இறக்கினார். அதற்கு பழி வாங்கவே பாராளுமன்ற முதல் நாளில் அவரை அவரது ஆசனத்தில் அமரவிடாது பழி வாங்கினேன், நான் தலைவர் வளர்ப்பிடா தமிழன்டா” என்று கூறியிருந்தார். இது தமிழ் மக்களை கொஞ்சம் மகிழ்ச்சிப்படுத்தியது அர்ச்சுனாவின் செயலையும் தமிழ் மக்கள் நியாயப்படுத்தினர்.

ஆனால் எதிர்கட்சித்தலைவரின் ஆசனத்தில் அர்ச்சுனா எம்.பி, அமர்ந்து எழுந்திருக்க மறுத்தமை எதிர்கட்சியினால் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டபோது “நான் புதிய எம்.பி., பாராளுமன்ற விதி முறைகள் தெரியாமல் அமர்ந்து விட்டேன்.எனக்கு அதனை யாராவது தெரிவித்திருந்தால் அமர்ந்திருக்க மாட்டேன். நான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கோருகின்றேன்” என அந்தர் பல்டி அடித்து பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதன்மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு முகத்தையும் தென்னிலங்கைக்கு ஒரு முகத்தையும் காட்டி தனது பித்தலாட்ட அரசியலையும் ஆரம்பித்தார்.

இதேபோன்று அர்ச்சுனா எம்.பி முன்னுக்கு பின் முரணாக தெரிவித்த சில விடயங்கள்.

எனது தந்தை விடுதலைப்புலிகளின் காவல்துறை அதிகாரி. ஜெர்மனியிலிருந்து நாடு திரும்பி தமிழ் மக்களுக்காக விடுதலைப்புலிகளின் காவல்துறையில் இணைந்து இறுதியில் வீரமரணம் அடைந்தார். இது தேர்தலுக்கு முன்னர் அர்ச்சுனா தமிழ் மக்களுக்கு கூறிய தகவல். அதனைத்தொடர்ந்து சிங்கள சமூக ஊடகமொன்றுக்கு பேட்டி வழங்குகையில், “நாம் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டோம். சோற்றுக்கே வழியில்லாமல்தான் எனது தந்தை விருப்பமின்றி விடுதலைப்புலிகளின் காவல்துறையில் இணைந்தார்” என்று கூறியிருந்தார். இது பெரும் சர்ச்சையான யானபோது அது தொடர்பில் கேள்வி எழுப்பிய தமிழ் சமூக ஊடகவியலாளருக்கு “ரணில் சொல்லித்தான் நான் அப்படி சொன்னேன்” எனக் கூறி இருந்தார்.

தனது தந்தை தொடர்பில் பல இடங்களிலும் பல முரண்பட்ட கதைகளையே அர்ச்சுனா எம்.பி கூறி வருகின்றார். இறுதியாக அவர் கூறிய விடயம் “எனது தந்தை இறுதி யுத்தத்தில் காயமடைந்தார். அவரை சிகிச்சைக்காக தலைவர் கப்பலில் புல் மோட்டைக்கு அனுப்பி வைத்தார். அவர் சிகிச்சைக்கு சென்ற இடத்தில்தான் காணாமல் போனார். அவர் உயிருடன் இருப்பார் என்றே நம்புகின்றேன். காணாமல் போனவர்களில் எனது தந்தையும் ஒருவர்” என்பது. ஆனால் அர்ச்சுனாவின் தந்தை தொடர்பில் விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்கள் சிலரிடம் வினவியபோது அவர்கள் கூறிய விடயம் அதிர்ச்சிகரமானது. அர்ச்சுனா விடும் புலுடாக்களுக்கு நேர் விரோதமானது. அதனை இங்கு குறிப்பிட்டு இறந்த ஒருவரை அசிங்கப்படுத்த விரும்பவில்லை.

கார் திருத்த காசு இல்லை. கொழும்பில் தங்கியிருக்க வாடகை கொடுக்க காசு இல்லை. கார் சாரதிக்கு சம்பளம் கொடுக்க காசு இல்லை. எனது வழக்குகளுக்கு வாதாட காசு இல்லை. பாராளுமன்றத்திற்கு வந்து போக எரிபொருளுக்கு கூட காசில்லை எனக்கூறி புலம்பெயர் உறவுகளிடம் நிதிகளைப் பெறும் அர்ச்சுனா எம்.பி, சோற்றுக்கே வழியில்லாமல் விடுதலைப்புலிகளின் காவல்துறையில் தனது தந்தை இணைந்ததாக சிங்கள ஊடகத்திற்கு பேட்டியளித்த அர்ச்சுனா எம்.பி கூறிய இன்னொரு விடயம் இது. “யாழ்ப்பாணத்தில் எமது குடும்பமே பணக்கார குடும்பம். எம்மிடம் 150 பஸ்கள் இருந்தன. 10 திரையரங்குகள் வைத்திருந்தோம். யாழ்ப்பாணத்திலே முதன் முதலாக “அற்றாஜ் பாத்ரூம்” உள்ள வீட்டைக் கட்டியவர்கள் எமது குடும்பம்தான்” என்றார். அதன்பின்னர் பாராளுமன்றத்தில் ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான விவாதம் ஒன்றில் பேசுகையில் “நானும் ஒரு ஏற்றுமதியாளன். அமெரிக்காவிற்கு மில்லியன் டொலர்களில் ஏற்றுமதி செய்கின்றேன்” என்றார். எம்.பி.க்கள் தமது சொத்து விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனக்கூறியபோது என்னிடம் 15 கோடி ரூபா சொத்துக்கள் உள்ளன என்கின்றார்.

அதுமட்டுமல்ல நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கட்டுப்பணம் செலுத்தவென புலம்பெயர் உறவுகளிடம் இலட்சக்கணக்கில் நிதி சேகரித்த அர்ச்சுனா எம்.பி எத்தனை பேருக்கு கட்டுப்பணம் செலுத்தினார்? எத்தனைபேர் போட்டியிட்டனர்? ஒரு இடமும் கட்டுப்பணம் செலுத்தப்படவில்லை.




(தொடர்ச்சி 23 பக்கம்)


2025 OCT 12
THANKS GIVING
LONG WEEKEND
SUNDAY @ 6 PM
Title Sponsor
Vijaya Jewellery
437-833-3197
647-329-3062
Markham & Steeles
EARLY BIRD TICKETS
$40
VIP $75
AT THE DOOR MORE
$50 & VIP $100
Ramu Maharajapuram
Playback Singer
TMS Selvakumar
Playback Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
நெஞ்சம் மறப்பதில்லை
Muisc Band
SEVENOTES
Evergreen night
SHIVAS CHICKEN
WHOLE SALE CANADA INC
416-910-3244
186 Bartley Dr. #12A, Toronto, ON
STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298 1700
Fax: (416) 754-8651
www.standardmortgagesinc.com
RAJ SUBRAYAM
CEO
Ocean Accounting Tax Consultants
Accounting Services for Personal and Smalll Business
PROVIDING
PERSONAL TAX RETURNS
CORPORATE TAX RETURNS
GST/HST AND PAYROLL FILING
Park Plaza
1646 Victoria Park Ave., Suite 1
Toronto, ON. M1R 1P7
Tel: 416-285-6900
Fax: 416-285-4877
Email: info@oceantax.ca
Web: www.oceantax.ca
Call us 416-285-6900
VIBRANT HOSPITALITY GROUP
KARIS EVENT PLACE
More Info :
416-564-9642
416-566-0790
55 Nugget Ave unit 10,
Scarborough, ON M1S 4L4
TICKET LOCATION
Scarborough
Cell Tell Mobility
2611 Eglinton Ave East
416-266-6818
Cell Tell Mobility
Birchmount Road / Finch
2950 Birchmount Rd Unit# 5C
(416) 495-7776
Kennedy & Ellesmere
Samy & Sons
416-298-1598
Ruby & Ruby Saree Palace Inc.
2843 Lawrence Ave Est
416-264-7833
Markham & Steeles
New Royal Fashions
416-519-1119
Vijaya Jewellery
3341 Markham Rd #127,
Scarborough, ON M1X 0A5
(437) 833-3197
New Spiceland
Supermarket Video
647-471-1810
Sprin Florist Canada
3011 Markham Rd
416-893-2624
Majestic City
Designs 2 Prints LTD
Tel: 647-858-2290
GTA Square Mall
Winners Lotto Centre
Tel: 416-291-9990
Eraa plaza (Neilson / Finch)
Sai Elanthulir Fashion
Jewellery & Money Transfer
Tel: 416-471-1002
Tapscott Rd / Finch ave
DTA Convenience
416-332-0961
5633 Finch Ave E units 5
Middlefield Rd & Steeles Ave
Pasumai Market
2-2002 Middlefield Rd,
Markham,
(905) 472-5525
Etobicoke (Kipling & Steeles)
A S A Financial Service
(in Uthayas Supermarket)
Tel:416-742-1425
AJAX (Harwood & Taunton Rd)
New Spiceland Restaurant
905-426-4445

Est. 1993

# 32வது ஆண்டில்

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் -கனடா

பெருமையுடன் வழங்கும்

# மாவிலி வசந்தம் 2025

## கலை, பண்பாட்டு விழா

எமது மண்ணின் மைந்தர்கள் யாழ் மாவட்ட அரச அதிபர்

**திரு. பிரதீபன் மருதலிங்கம்**

மற்றும் சமூக சேவையாளர்

**திரு. செல்வின் இ. மரியாம்பிள்ளை**

அவர்களின் சிறப்பு வருகையுடன்

On
Oct. 11
2025
4:00 pm

பறை இசை, சிலம்பம்
நாடகம், இன்னிசை
இன்னும் பல

At
Peoples Theatre for The Performing Arts
22 Esna Park Drive
Markham, ON, L3R 1E1

**பிரதான அனுசரணை**

Queenshead Pub
1214 Queen St. E

Queenshead Pub
2555 Victoria Park Ave.

Queenshead Pub
1042 St. Clair Aev. W

**இணை அனுசரணை**

SM Medical Centre

RE/Max
Community Inc. (Brokerage)

neem connect
One Community. Endless Opportunity.

நெடுந்தீவு மாணவர்களின்கல்வி மற்றும்,
கல்விசாரா செயல்திறன் வளர்ச்சிக்கும் உதவிக்கரம் கொடுப்போம்


HSB
CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
ஸ்கார்ப்ரோ &
டெல்டா வில் மட்டும்
புரட்டாசி சனி
விரத சாப்பாடு
செப்டம்பர் 20, 27, அக்டோபர் 4 & 11, 2025
சிறப்பு உணவுகள்
• சூப்
• பிளைன் தோசை
• மிளகாய் பொடி தோசை
• பட்டர் தோசை
• நெய் தோசை
• மினி ஊத்தப்பம்
• இட்லி
• பூரி
• ரவா கிச்சடி
• மெது வடை
• ஆனியன் பக்கோடா
• அன்லிமிடெட் தோசை / பூரி / வடை
• நெய் பொங்கல்
• உருளைக்கிழங்கு மசாலா
• டிபன் சாம்பார்
• கலவை காய்கறி சாம்பார்
• தேங்காய் சட்னி
• ஸ்பெஷல் சட்னி
• சாப்பாடு
• ஸ்பெஷல் சாப்பாடு / நூடுல்ஸ்
• செஃப் ஸ்பெஷல் பிரியாணி
• சாம்பார் சாதம்
• தயிர் சாதம்
• காய்கறி கூட்டு
• காய்கறி பொரியல்
• ஸ்பெஷல் பொரியல்
• தந்தூரி கறி
• ஸ்பெஷல் குழம்பு
• ரசம்
• தயிர்
• பச்சடி
• அப்பளம்
• மோர் மிளகாய்
• ஊறுகாய்
• பாயசம்
• ரவா கேசரி
• பருப்பு பொடி
• நெய்
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575


TORONTO
SATURDAY, OCT 18 2025 @ 5:30 PM
ARMENIAN COMMUNITY CENTER
SUNDAY, OCT 12 2025 @ 5:30PM
VANIER COLLEGE AUDITORIUM
MONTREAL
TICKETS
$100 & $50
Title Sponsor
HOMELIFE
HIGHER STANDARDS
ALPHA
REAL ESTATE LTD. BROKERAGE
Killi Chelliah BSc. Eng.
SALES REPRESENTATIVE
Dir: 416.624.7562
OFF: 416-818-0304 | FAX :647 366 9596
Gold Sponsor
Future Line Ltd
CUSTOM PVC EXTRUSION
www.futureline.ca
Silver Sponsor
Lucvaa
KITCHENS
www.Lucvaa.com
COOLMASTER.CA
COOL MASTER
REFRIGERATION
BEST CUSTOM BUILD
COMMERCIAL REFRIGERATION
416-742-0742
அன்புநெறி
Anpuneri
Humanitarian Relief Organization.
பெருமையுடன் வழங்கும்
நாத சங்கமம்
WAGESHAN & HIS BAND
2025
647-800-8742
ARMENIAN COMMUNITY CENTRE | 45 HALLCROWN PL, NORTH YORK
Thermo Care
HEATING & COOLING
BEST SERVICE
BEST WARRANTY
BEST PRICE
513 East Avenue Scarborough ON M1C 2X1
416 825 9373 | 416 640 1174
www.themocare.ca
Supreme Lube
ETOBICOKE
240 Dixon Rd
(416) 241-5588
PICKERING
1051 Brock Rd Unit 1,
(905) 426-5598
PICKERING SCARBOROUGH AIRPORT
GFORCE
CAR & TRUCK RENTAL
www.gforcerental.com
416-894-6969
ARS
construction
INTERLOCKING, DECK, FENCE, ASPHALT PAVING
BASEMENT RENOVATION
(647) 861-1979
Senthooran Punithavel
the co-operators
Babu Florist Ltd.
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
babuflorist@gmail.com
Joseph (Jude)
Project Manager
Green Field
416-986-9222
winsmart.ca
WINSMART
10 Milner Business Ct Suite 317, Scarborough
647.777.8361
GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance
DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC
7611 PINE VALLEY DR #19, WOODBRIDGE, ON L4L 0A2
416-335-3683
நந்தா
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON
TAMIL RESTAURANT IN GTA
416 - 626-8421
www.nantha.com
With Best
Compliments
From
RE/MAX
COMMUNITY
GAJAN
MAHAKANAPATHY
416.999.2777
J&J
GROUP
FROM
BIDDINGTON
Building Quality for Generations
Gobal Mailwaganam
1962 Yonge Street Suite 200
Toronto, Ontario M4S 1Z4

கனடிய செய்திகள் Canadian News

# "தியாக தீபம்" திலீபன் அவர்களின் தியாகத்தின் உயர்வை நமது இளைய தலைமுறையினர் ஊடாக பல தலைமுறைகளுக்கு காவிச் செல்லவேண்டும்

## மிசிசாகா மாநகரில் BEHIND ME INTERNATIONAL MEDIA INC ஊடக நிறுவனம் நடத்திய "தியாக தீபம்" திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழவில் ஊடக நிறுவனத்தின் அதிபர் கனேந்திரன் செல்வராஜா அழைப்பு

""தியாக தீபம்" தியாகி திலிபன் அவர்களின் உயிர்த்தியாகம் என்பது எவ்வளவு உயர்வானது என்பதை காலஞ் செல்லச் செல்ல எமது தமிழ்ச் சமூகம் மாத்திரமல்ல. உலகெங்கும் உள்ள பல மொழி பேசுகின்றவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் பலர் நான்கு திசைகளிலும் பரப்புரைகளைச் செய்து வருகின்றனர். எங்களைப் பொறுத்தளவில் தியாக தீபம் அவர்களின் தியாகத்தை மேலும் உலகம் அறியச் செய்யும் வகையில் நாம் எமது தமிழ் இளைஞர்கள் கையில் அவரது நினைவேந்தல் நிகழ்வுகளை ஒப்படைக்க வேண்டும். எமது இளைஞர்கள் பலர் திலீபன் அவர்களது தியாகத்தின் பெருமையையும் வலிமையையும் புகழந்து பாடல் பாடல்களை நினைவேந்தல்களில் உணர்வோடு பாடுகின்றார்கள். அந்த தியாக பற்றிய உரைகளை நேர்த்தியாக ஆற்றுகின்றனர். எனவே அவ்வாறான இளைஞர்களே எமது அடுத்த தலைமுறைகளுக்கு "தியாக தீபம்" திலீபன் அவர்களின்நினைவுகளையும் அவரது தியாக சிந்தையும் தொடர்ச்சியாக எடுத்துச் செல்லக்கூடியவர்கள். எனவே நாம் இவ்வாறான பணிகளை தொடர்ச்சியாக கைக-ளில் எடுத்துக் கொண்டு இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு எமது தமிழீழ மண்ணில் உதித்து தனது உயிரைத்தியாகம் செய்த அந்த மாவீரனின் நினைவின் இருப்பை உறுதி செய்ய வேண்டும்."















இவ்வாறு மிசிசாகா மாநகரில் கடந்த 26-09-2025 அன்று வெள்ளிக்கிழமை காலை BEHIND ME INTERNATIONAL MEDIA INC ஊடக நிறுவனம் தனது அலுவலக வளாகத்தில் நடத்திய "தியாக தீபம்" திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழவில் பிரதான உரையாற்றிய ஊடக நிறுவனத்தின் BEHIND ME INTERNATIONAL MEDIA INC அதிபர் கனேந்திரன் செல்வராஜா அழைப்புவிடுத்தார்.

அன்றைய தினம் ஸ்காபுறோ மற்றும் பிரம்ரன் மிசிகாகா ஆகிய இடங்களிலிருந்து பல உணர்வாளர்களும் வர்த்தகப் பிரமுகர்களும் அங்கு சமூகமளித்தனர்.

முதலில் கனடிய தேசியக் கொடியை னேந்திரன் செல்வராஜா அவர்களும் தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் ஒருவரின் தாயாரும் ஏற்றிவைத்தனர்.



தொடர்ந்து உள்ளக மண்டபத்தில் தொடர்ச்சியாக பல நினைவு உரைகளும் ஒளிப்படக் காட்சியும் இடம்பெற்றன.

அங்கு உரையாற்றி கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உப தலைவர்களில் ஒருவருமான லோகன் லோகேந்திரலிங்கம் உரையாற்றுகையில், "விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல்துறை பொறுப்பாளராகவும் போராட்டக் களங்களில் தோள்களில் துப்பாக்கிகளோடு போராளியாகத் திகழ்ந்தவருமான திலீபன் அவர்கள் தனது தியாகத்தின் பின்னர் அவர் ஒரு தியாகியாகவும் மாவீரராகவும் பெருமையுடன் அழைக்கப்பெற்றாலும் தனது உயரிய தியாகத்தின் மூலம் திலீபம் என்னும் விடுதலைப் போராட்டக் கோட்பாட்டையும் தோற்றுவித்துள்ளார். அத்துடன் அவரது தியாகம் என்பது ஒரு சாதாரண இழப்பு அல்ல. அந்த அர்ப்பணிப்புள்ள இறப்பினை நாம் நினைவேந்தல்களின் மூலம் வருடாந்தம் கொண்டாடும் நிலையிலும் அவரை போற்றுவதிலும் அவரது நினைவேந்தல் நிகழ்வு தற்போது ஒரு போராட்டத்தின் ஆயுதமாகவே விளங்குகின்றது. ஏனென்றால் இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் வருடாந்த தியாக தீபம் திலீபன் நினைவு நாட்கள் 12 நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகையில் நடுக்கமுறுகின்றார்கள்" என்றார்.

அங்கு திலீபன் அவர்கள் தனது உயிரை யாழ்ப்பாணம் நல்லூரில் தியாகம் செய்த கடைசி மணித்தியாலங்கள் அடங்கிய ஒளிநாடா ஒன்றையும் BEHIND ME INTERNATIONAL MEDIA INC நிறுவனத்தின் தொழில்நுட்பப் பிரிவினர் தயாரித்து காட்சிப்படுத்தினர்.

மேலும் பல உணர்வாளர்களும் அரசியல் ஆர்வலர்களும் அங்கு உரையாற்றினர்.

**படங்களும் செய்தியும்: சத்தியன்**

(10 பக்கம் தொடர்ச்சி)

## மன்னார்த் தீவில் காற்றாலை வேண்டுமா? வேண்டாமா?

அந்தக் கத்தோலிக்க மதகுரு அதை மறுத்தார். "இல்லை நாங்கள் எல்லாவிதமான விஸ்தரிப்பு வாதங்களுக்கும் எதிரானவர்கள்" என்று சொன்னார். அப்படியென்றால் சீனா ஏற்கனவே அம்பாந்தோட்டையிலும் கொழும்புத் துறைமுகத்துக்கு அருகிலும் வந்துவிட்டது.அந்தச் சீன விஸ்தரிப்பு வாதம் தொடர்பாகவும் நீங்கள் பேசுவீர்களா? என்று அந்தத் தமிழ்ச் செயற்பாட்டாளர் கேட்டார்.


அந்த உரையாடலில் சம்பந்தப்பட்ட மதகுரு கடந்த திங்கட்கிழமை மன்னாரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போதும் காணப்பட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு அதானியின் முதலீட்டை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு பகுதி என்று எதிர்த்த தன்னெழுச்சிப் போராட்டங்களின் குழந்தைதான் இப்போதுள்ள என்பிபி அரசாங்கம். ஆனால் அது காற்றாலை வேண்டாம் என்று கேட்டுப் போராடிய மன்னார் மக்களின் மீது பலத்தைப் பிரயோகித்துள்ளது. அதற்கு எதிராக கடந்த திங்கட்கிழமை நடந்த போராட்டத்தில் அரகலய போராட்டத் தலைவர்களும் இணைந்திருக்கிறார்கள். இதன்மூலம் என்பி பி வேறு தாங்கள் வேறு என்று அவர்கள் காட்டக்கூடும்.

காற்றாலைகளின் விடயத்தில் தமது மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உட்பட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போதிய அளவுக்கு எதிர்ப்பு காட்ட வில்லை என்ற ஒரு குறை மன்னார் மாவட்ட செயற்பாட்டாளர்கள் மத்தியில் முன்பு இருந்தது. எனினும் கடந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது, பொது வேட்பாளரை முன்னிறுத்திய அணி மன்னாரில் நகரப் பகுதியில் நடத்திய பெரிய பொதுக்கூட்டத்தில் அது தொடர்பாக பேசப்பட்டது.சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் அங்கே மன்னர் மக்களின் கவலைகளைப் பிரதிபலித்தார். காற்றாலை, கடலட்டை இரண்டும் ராஜதந்திரப் பொருட்களாகி விட்டன என்று கூறிய அவர், காற்றாலை, கடலட்டை, கனிமவள அகழ்வு போன்றவை தமிழ் மக்களின் நில உரிமை, கடல் உரிமை போன்ற கூட்டு உரிமைகளோடு சம்பந்தப்பட்டவை என்றும், எனவே அதில் தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக முடிவுகள் எடுக்கப்படக்கூடாது என்றும் தெரிவித்திருந்தார்.

இப்பொழுது அரசாங்க மக்கள் மீதும் மதகுருக்கள் மீதும் பலப் பிரயோகத்தைச் செய்த பின் விவகாரம் சூடு பிடித்து விட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகளும் உட்பட பெரும்பாலான கட்சிகள் மன்னார் மக்களின் பக்கம் நிற்கின்றன. இப்பொழுது போராட்டம் பரந்தளவில் மக்கள் மயப்பட்டுவிட்டது. அரசாங்கத்தின் பலப்பிரயோகம் அதை பலப்படுத்தி விட்டது. தன்னெழுச்சிப் போராட்டங்களின் விளைவாக வந்த ஓர் அரசாங்கம் இந்த விடயத்தில் என்ன முடிவை எடுக்கும்? தனது வெளிநாட்டுப் பயணத்தில் ஜனாதிபதி கதைத்த கவர்ச்சியான, அலங்காரமான சொற்களைக் கொண்ட உரைகள் யாவும், கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மக்கள் மீது போலீசார் பலத்தைப் பிரயோகித்த போது பொருள் இழந்து போய்விட்டன.

# மணிமேகலையில் இடம்பெறும் மாலைக் காட்சி

Dr. புட்பா கிறிட்டி -- (647) 703-5538, pushpachristy@gmail.com




இரட்டைக் காப்பியம் என்று அழைக்கப்பட்ட சிலப்பதிகாரத்தின் மற்றொரு அங்கமான மணிமேகலை மிகவும் சிறப்பான காப்பியம். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையைச் சீத்தலைச் சாத்தனார் தன் எண்ணங்களைப் பிரதியாக்கி இயற்றி நமக்குத் தந்து இருக்கிறார்.

சிலப்பதிகாரம் இல்லறத்தையும், மணிமேகலை துறவறத்தையும் விளக்குவதால் தான். இவை இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகிறன. காப்பியத் தலைவி மணிமேகலை பற்றிய அபரிமிதமான தகவல்கள் உள்ளதால் இந் நூலானது மணிமேகலை என்று அழைக்கப்பட்டது. தமிழில் தோன்றிய நூல்களிலேயே முதல் சமணக் காப்பியம் இந்த மணிமேகலை ஆகும்.

இந்நூலில் பௌத்த மத நீதிக் கருத்துக்கள் அதிக அளவில் கொட்டிக் கிடக்கின்றன. கோவலன், மாதவி தம்பதியின் மகள் மணிமேகலையையும் அவள் கதையையும் விளக்கும் நூல் இந்த மணிமேகலைக் காப்பியம். மிகுந்த நற்பண்புகளைக் கொண்ட மணிமேகலை துறவி ஆக வேண்டும் என்று எண்ணிய போது இவளைத் தொடர்ந்து வந்த சோழ மன்னனை, விடுத்து துணிச்சலுடன் துறவு பூண்ட கதை தான் மணிமேகலை.

மணிமேகலை ஒரு சீர்திருத்தக் காப்பியம் என்பதனால், ஆசிரியர், கொல்லாமை, ஊன் உண்ணாமை, கள் உண்ணாமை ஆகியவற்றை மிக முக்கியமாக எடுத்துக் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அனைத்து உயிர்களிடமும் அன்போடு நடக்க வேண்டும் என்ற உண்மைக் கோட்பாடு உணரும்படி சொல்லப் பட்டுள்ளது. மேலும் சிறைச்சாலைகள் அனைத்தும் அறச்சாலைகளாக மாற்றப்பட வேண்டும் என்றும், அங்குள்ளோர்க்கு அமுதசுரபி கொண்டு மணிமேகலை அவர்களின் பசிப்பிணி தீர்ப்பதும் இக் காப்பியத்தின் தனிச்சிறப்பாகும்.

தொல்காப்பியர் பயன்படுத்திய எட்டு அணிகளுடன், மடக்கணி, சிலேடை அணி ஆகியன இக்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் தனிச் சிறப்பு. இந்த காப்பியத்திற்கு வேறு சில பெயர்களும் உள்ளது. அவை மணிமேகலை துறவு, முதல் சமய காப்பியம், அறக் காப்பியம், சீர்திருத்தக் காப்பியம், புரட்சிக் காப்பியம், பசிப்பிணி மருத்துவக் காப்பியம், பசு போற்றும் காப்பியம், துறவுக் காப்பியம் என்பதாகும்.

இந்நூலில் மொத்தம் 30 காதைகள் உள்ளன. இது நிலைமண்டில ஆசிரியப்பாவை கொண்ட ஒரு பௌத்த சமய நூலாகும். எனினும் நூலில் காண்ட பிரிவுகள் எதுவும் இல்லை.

தமிழில் தோன்றிய முதல் சமய காப்பியமாக இவ் மணிமேகலை காப்பியமே காணப்படுகிறது. மேலும் உலக இன்ப நாட்டத்தினை முழுமையாக வெறுத்து பௌத்த மதத் துறவி தன் பவத்திறம் அறுக என நோற்றுச் சிறப்பு பெற்றதனைச் செந்தமிழ் நலம் சிறக்கச் சீத்தலைச் சாத்தனார் பாடியுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

மணிமேகலை காப்பியத்தில் சமுதாய சிந்தனைகள் இயற்கையாகவே அமைந்துள்ளமையினை காணலாம். அதாவது மக்களின் கூட்டுணர்வை வெளிப்படுத்தும் சமுதாய உணர்வை மணிமேகலை காப்பியமானது சிறப்பாக விளக்கியுள்ளது. காலத்தின் பிறப்பால் சாதிகள் அமைத்து சமுதாய உணர்வு தோன்றியதாக காணப்படவில்லை. மாறாக தொழில் அடிப்படையில் ஒன்று சேர்ந்த மனித இனம் சமுதாயமாக கருதப்பட்டு மணிமேகலையில் சமுதாய ஒற்றுமை மிகவும் நேர்த்தியாக காணப்படுகிறது.

மணிமேகலை, தாய் மாதவியால் ஆடலும் பாடலும் கூடிய பரத்தமை வாழ்க்கையிலிருந்து விடுவிக்கப்பட்டு தவ வாழ்க்கைக்கு உரியவளாகிறாள்.

காப்பியத்தில் மணிமேகலையின் அறிமுகம் அவளின் கண்ணீரோடுதான் தொடங்குகிறது. கண்ணீருக்குக் காரணம் மாதவி, தோழி வயந்தமாலையிடம் சொல்லிய கோவலன் கண்ணகியர் அடைந்த பெருஞ்சோகம் குறித்த விவரிப்பு. தாயின் துயரத்தோடு ஒன்றிக் கண்ணீர் வடிக்கிறாள் மணிமேகலை. ஒரு காப்பியத் தலைவியைக் கண்ணீரோடு அறிமுகம் செய்யும் சாத்தனாரின் உட்குறிப்பு கதையின் ஊடாக மணிமேகலையைத் தொடர்வோருக்கே புலப்படக்கூடியது.

மாலைக் காட்சி என்றால், மனதுக்கு மகிழ்வைத் தரும் காட்சியாகும். முதலில் இங்கு பொதுவான மாலைக் காட்சியை உங்களுக்குத் தருகின்றேன். மாலையில், தன் நிறம் மாறும் சூரியன், தங்கத் தகடு போன்று மாறித் தெரிவான். மதியம் சூடாக இருந்த அந்தப் பொழுது, தன் வெப்பத்தைக் குறைத்து, மெல்லக் குளிர்ச்சி அடைந்து, தன் நிலையை மாற்றிக் கொள்வான். பரபரப்பாக இயங்கிய பகற்பொழுது, மெல்ல மெல்ல அமைதியைத் தேடி நடைபோடும். இங்கு ஆக்டிக், அண்டாட்டிக், கிறின்லாந்து போன்ற பகுதிகளிலும், கனடாவில், வடக்குக் கிராமப்புறங்களில், மாலைக் காட்சி, பல வர்ண நிறக்கலவையுடன் கலந்து அழகு காட்டிச் சிறப்புச் செய்யும். அதே போன்று கனடாவில், Yellow knife, என்னும் Union territory. இது, பாண்டிச்சேரி போன்ற தனித்த மாவட்டம். ஒரு வடமாநிலம், மேலும், மனிடோபா, லாபரோர், ஒன்றாடியோ, அல்பேட்டா போன்ற இடங்களிலும் அழகு வர்ண நிறங்கள் தோன்றும்.

அந்த நிறங்கள் பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு, நீலம், என ஒரு நிறக்கலவையாகக் கூடி அழகு காட்டும். அதை இங்கு அனைவரும் படமெடுத்து பிறருக்கும் அனுப்பி மகிழ்வர்கள். இந்த அழகிய வர்ணக் கூட்டுக் கலவைகட்கு மத்தியில், செங்கதிரோன், சிவந்த மேனியுடன், அடிவானைத் தொட்டு, மறையத் தொடங்குவான். வானக் கிண்ணத்துக்குள் சூரியன், வட்டப் பந்து போன்று இறங்கி மறைந்து கொள்வான். நான் வசிக்கும் ரொரொன்றோ எனும் இடத்தில், மாலை நேரம் இன்பம் தரும். பனிக்காலத்தில், குறைந்த பகலும், நீண்ட இரவுப்பொழுதும், பாடசாலை முடித்து வீடு வந்த மாணவர்கள். மாலை உணவை முடித்துக் கொண்டு, தாம் விரும்பிய படி விளையாடத் தொடங்குவர்.

சிலர் கணனியில் விளையாடுவார்கள். வேறு சிலர் பெற்றோரின் தொலைபேசியைப் பறித்து வைத்து, அதில் விளையாடி மகிழ்வார்கள். வேறு சிலர், நீச்சல், பியானோ, கராட்டே, கால்பந்து, கூடைப்பந்து, எனப் பல வித விளையாட்டுக்களுக்குப் பெற்றோருடன் கூடிச் செல்வார்கள். இன்னும் சிலர், பரத நாட்டியம், வீணை, தபேலா, மிருதங்கம், வாய்ப்பாட்டு போன்ற நல்ல கலைப்பாட வகுப்புக்களுக்கும் தொடர்ந்து செல்வார்கள். கோடை காலம் நீண்ட பகலையும், குறைந்த இரவையும் கொண்டது. பள்ளி விட்டு வீடு வரும் சிறுவர்கள், சிலர் வீட்டில், ஓடி விளையாடுவார்கள். சைக்கிள் ஓடி மகிழ்வார்கள். அல்லது தம் வீட்டுக்கு முன்னாலேயே கண்ட படி ஓடி ஆடித் திரிவார்கள்.

அதற்கென, நாங்கள் வசிக்கும் எமது குடிமனைப் பகுதிகளில், வாகனங்களுக்கு வேகக் கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளன. மணித்தியாலத்திற்கு, 30 கிலோ மீற்றர் வேகத்தில் மட்டும் தான் வாகனம் ஓடலாம். அதையும் விட, அங்கங்கே குறிப்புப் பதாதைகள் நடப்பட்டிருக்கும். “இங்கே சிறுவர்கள் விளையாடுகிறார்கள். மெதுவாக வாகனம் ஓட்டவும்” எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். எல்லாரும் அதை மதித்து நடப்பார்கள். காரணம், எல்லோருக்கும் குழந்தைகள் இருப்பதனால், அவர்கள் எல்லோரும் அதனை மதித்து, வேகத்தைக் குறைத்து வாகனத்தை ஓட்டுவார்கள். வேலைக்குச் சென்ற பெரியவர்கள், அவசர அவசரமாக வீட்டை நோக்கி ஓடி வருவார்கள். அவர்கள் கவனம், பிள்ளைகள், இரவு உணவு தயாரிப்பு, மற்றும் மறுநாட்காலை மீண்டும் வேலைக்குச் செல்லும் ஆயத்தங்கள் எனச் செல்லும். சனி, ஞாயிறு தினங்களில், ஒன்று கூடல்கள், களியாட்டங்கள், சுற்றுலா எனக் கழியும்.

இனி இலங்கை, இந்தியா போன்ற எம் நாடுகளில், மாலைக் காட்சிகளைப் பார்க்கலாம். வீட்டிலே பெண்கள் முற்றத்தைக் கூட்டி, வீட்டைப் பெருக்கி, விளக்கேற்றி, மகிழ்வர். தொலைக்காட்சி நாடகங்களில், தம் நேரத்தைச் செலவு செய்வார்கள். எம்மைப் போன்று, இலக்கிய தாகமுள்ளவர்கள், இது போன்ற இலக்கிய நிகழ்வுகளில், தம் நேரத்தைச் செலவு செய்வார்கள். ஆண்கள், தமக்கேயுரிய பாணியில், குளித்து, ஆடைமாற்றி, நண்பர்களைத் தேடிச் செல்வார்கள். சிலர், கொஞ்சம் களியாட்டங்களில் தமது நேரத்தைச் செல்வு செய்து, குடித்து, கும்மாளமடிப்பார்கள். வானொலி கேட்டுப் பாடல்களைப் பாடி மகிழ்வார்கள். தொலைக்காட்சியில், சினிமா பார்ப்பார்கள்.

வேறு சிலர் உழைப்பு உழைப்பு என ஓடி உழைத்து, தம்மை மறந்து, பணத்தை நினைந்து, தம் வாழ்வின் பெரும்பாகத்தை இழந்து கொண்டிருப்பார்கள். இனி கிராமத்துக் காட்சிகளுடன் கூடிய இயற்கை நிகழ்வுகளைக் காணலாம். பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள், மாலைச் சூரிய ஒளியில், வயலின் பசிய நிறம் கசங்கி அழகு காட்டும். வீசும் மெல்லிய காற்றில், அந்தப் பச்சை வயலின் பசிய கதிர்கள் ஆடி அசைந்து, கடலலை போன்று, அசைந்து அழகு காட்டும். சிட்டுக் குருவிகள், கிளிகள், விளைந்த நெற்கதிரைக் கொத்தி எடுத்துச் சென்று, தம் குஞ்சுகளுக்குத் தீன் கொடுக்கும். வயலில் மீன்கள், தவளைகள், நண்டுகள் குதித்துக் கும்மாளமிட்டுக் கொண்டாட்டம் செய்வார்கள்.

ஒருசில நேரத்தில், பாம்பின் வாயில் அகப்பட்ட தவளை, தன்னை விடுவிக்கும் படி, ஈனக்குரலில், குரலெழுப்பி அழும். மரத்தில் கண்காணாது மறைந்திருக்கும் குயிலொன்று, தன் துணையைத் தேடிக் கூ.. கூ. எனக் குடல் கொடுக்கும். அதற்கு எசப்பாட்டாக, வீட்டிலிருக்கும் சிறுவர்கள், தாமும் கூ. கூ எனக் குரல் கொடுப்பார்கள். அது கேட்ட குயில் மேலும் கூ. கூ என ஆவேசமாகக் குரலெழுப்பும். இது அந்த மாலையை மயக்கும் ஒரு சோகச் செயலாகத் தெரியும். மேயச் சென்ற மாடுகளைக் காணவில்லை என்றால், வேப்ப மரம், பிலா மரத்தின் உச்சி மீதேறித் தேடுவோம். அங்கே கயிறின்றி அனுப்பிய மாடுகள், தொலைவில் மேய்வதைக் கண்டு, அந்தத் திசை நோக்கிச் சென்று, அவற்றை மேய்த்து, வீட்டுக்குக் கொண்டு வருவோம்.

மேய்ந்து முடித்த, பசுக்கூட்டங்களுக்கு, மடிமுட்டி விட்டதால், கன்றைத் தேடிக் கதறியபடி ஓடி வரும். இப்படித் தான் ஆட்டுக் கூட்டங்களும் பட்டியைத் தேடி வந்தடையும். காலையில் கவிதை பாடிப் பறந்த பறவைகள், மாலையில், தம் கூட்டைத் தேடி வந்தடையும். கொக்குக் கூட்டங்கள், வயல்களெல்லாம் நிறைந்து, உறு மீன் வரும் வரை காத்திருந்து, அதைப் பிடித்ததும் தம் கூட்டில் வந்தமர்ந்து, குஞ்சுகளுக்கு இரை கொடுத்திடும். அணில்கள், தத், தத் எனக் குரல் கொடுத்து, தம் கூட்டை வந்தடையும். ஒளித்திருந்து வெளியில் நடப்பதை வேடிக்கை பார்த்திருக்கும்.

கோழிகள், பகல் முழுவதும் மேய்ந்து விட்டு, கூட்டுக்குள் வந்து அடைந்து கொள்ளும். பகல் முழுவதும் வேலை செய்த தொளிலாளி களைப்புடன் வீடு திரும்புவான். எங்கள் கிராமத்தில், மாலை வேளையில், குழந்தைகள், குஞ்சுகள், பெரியவர் என அனைவரும், நிறைந்து ஓடும் வாய்க்கால் தண்ணீரில் முங்கிக் குளித்து, தம் உடற்சூட்டைத் தணிப்பர். தோட்டத்தில், துலா மிதித்து, நீர் பாய்ச்சிய ஆச்சி அப்பையா வீடு வந்து களைப்பு ஆறுவர். தேனீர் அருந்தி மகிழ்வர், அதன் பின்னர் இறை வழிபாட்டில் இறங்கி விடுவார்கள்.




கடற்கரைப் பகுதிகளில், வாழும் அனைவரும் காற்று வாங்கச் செல்வார்கள்.

சில இடங்களில், சிறுவர்கள், கிட்டிப் புள்ளு எனும் ஒருவித விளையாட்டை விளையாடி மகிழ்வார்கள். கடற்கரை மணலில், கோட்டை கட்டுவார்கள். வீடு கட்டி மகிழ்வார்கள். குழி தோண்டி, அந்தக் குழியிலே கடல் நீரை அள்ளிவந்து நிரப்பி மகிழ்வார்கள். சிப்பி, சங்கு என்பனவற்றைத் தேடிப் பொறுக்கி வந்து, அவற்றை வைத்து, தாம் கட்டிய வீட்டுக்கு, கோட்டைக்கு, அலங்காரம் செய்வார்கள். சில இளையவர்கள், நீச்சல் பழகுவார்கள். கடல் நீரில் கால் நனைத்து மகிழ்வார்கள்.

(தொடர்ச்சி 21 பக்கம்)


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


ஸ்ரீ பரம்ஜோதி அம்மா பகவான்
வழிபாடும் பிரசங்கமும்
ஸ்ரீ அம்மா பகவானின் மங்களகரமானதும் ஆசிர்வாதம் நிறைந்ததுமான ஒரு அமர்வில் எங்களுடன் இணைந்து கொள்ள உங்களை வரவேற்கிறோம். தியானம் மற்றும் உங்கள் உள் உலகம் தொடர்பான போதனையுடன் வழிகாட்டப்பட்ட அமர்வு. துன்பம், வலி ஆகியவற்றைக் குணப்படுத்தவும், உங்கள் பிரார்த்தனைகளுக்கு பதில் பெறவும் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.
மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுகின்றது.
எதிர்வரும்
ஒக்டோபர் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை
காலை 11.00 தொடக்கம்
7Studios & Events
101 Lebovic Ave, Unit# F01,
Scarborough, ON M1L 0J2
Free parking
மேலதிக விபரங்களுக்கு:
(416) 660-7545 அல்லது (647) 531- 9419


GM TOURS & TRAVELS
CHIANG MAI (THAILAND),
LAOS,CAMBODIA, VIETNAM,
BALI (INDONESIA) & MALAYSIA
$6699
Jan 16 to Feb 07, 2026
23 days tour!
6 countries
All Tours are All Inclusive
(Ticket, Breakfast, Lunch, Dinner, Transportation and Entering Fees)
* Travel Insurance Not Included * Visa for the countries not included
IT'S TIME TO TRAVEL
Call Or Whatsapp
BALAN: 647-657-0848
atoz_balan@yahoo.com
Book Before NOV 20th - 2025
Deposite - 70%
DESTINATIONS COVERD
Chiang Mai, Chiang Rai, Siem Reap,
Phnom Penh, Laos,Hanoi, Halong Bay,
Sapa, Bali, Malaysia
The tours will be departuring from and arriving at Toronto Pearson Airport

(18 பக்கம் தொடர்ச்சி)

# மணிமேகலையில் இடம்பெறும் மாலைக் காட்சி

நான் கூட அண்மையில் நியுயோர்க் நகரிலுள்ள கோனியாக் கடற்கரைக்குச் சென்ற போது, பல மக்கள், கொழுத்தும் மாலை வெய்யிலில் குடை நிழலில், இருந்து கொண்டு, இயற்கையை ரசித்தார்கள். சிலர் கடலில் குளித்து விட்டு வந்து, உடலில் எண்ணைய் பூசிக்கொண்டு, சூரியக் குளியலை ரசித்து, வெறும் தரையில் படுத்துக் கண்களை மூடிக் கிடந்தார்கள். நான் கூட, அந்தக் கடற்கரை மணலில், ஒரு தடியால், என் பெயரை எழுதி மகிழ்ந்தேன். இது போன்று, உழைப்புக்காகக் கடலுக்குச் செல்ல மனிதர்கள் தயாராகுவார்கள்.

கடலுக்குச் செல்ல வேண்டியவர்கள், தமது, உணவு என்பவற்றை கையில் எடுத்துக் கொண்டு, அரிக்கன் விளக்குடன், கப்பல், கட்டுமரத்தில், ஏறி, அந்தக் கட்டுமரத்தைக் கடலுக்குள் செலுத்துவார்கள். கடலுக்குச் செல்ல முனைவார்கள். அவர்கள் மனைவி குழந்தைகள், அங்கு வந்து, அவர்களை வழியனுப்பி வைத்து விட்டு, வழிபார்த்து, நிற்பார்கள். அங்கு, அந்த நேரத்தில், அழகான சூரியன், மாலை நேரத்தை முடித்து அடிவானில், தன் உறைவிடம் தேடிச் செல்வான். அந்தச் சூரிய அஸ்தமனம், காண அதிக மக்கள் கூடுவார்கள். படம் எடுத்து மகிழ்வார்கள்.

இவை எல்லாம் நான் ஏன் சொன்னேன்? காரணம், என்னிடம் மாலை பற்றிய விபரம் அதிகம் இல்லை. எனவே கொஞ்சம் மாலையை மனத்திலிருத்தி, மகிழலாம் என்பதாலேயே.

இனி நாம், மணிமேகலையில் வரும் ஒரு மாலைக் காட்சிக்குள் நுழைவோம். மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையான் 5 ஆம் பகுதியில், 119ஆம் பாடலில் வரும் இப்பகுதி. அந்தி மாலைப் பொழுதினை, ஒரு பெண்ணாக நிறுத்தி, இந்நூலின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் பாடியிருக்கும் பகுதி, இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் நன்கு சுவைக்கும் இனிய நலம் பொருந்தியிருப்பதைக் காட்டும் பகுதியாக இருக்கின்றது. வாருங்கள். நாம் அனைவரும், அந்த மாலைக்காட்சியை ரசித்துப் பார்ப்போம்.

இந்தப் பாடலிலே, புகார் நகருக்குள் அந்தி என்னும் பசலை எப்படி வந்தாள் எனக் கூறுகிறார் சீத்தலைச் சாத்தனார். அதனை இங்கு பார்க்கலாம்.

*குண திசை மருங்கில் நாள் முதிர் மதியமும்*
*குட திசை மருங்கில் சென்று வீழ் கதிரும் -------------------------------------------05-120*

*வெள்ளி வெண் தோட்டொடு பொன் தோடு ஆக*
*எள் அறு திருமுகம் பொலியப் பெய்தலும்*
*அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய*
*தன்னுறு பெடையைத் தாமரை அடக்க*
*பூம் பொதி சிதையக் கிழித்துப் பெடை கொண்டு*
*ஓங்கு இருந் தெங்கின் உயர் மடல் ஏற*
*அன்றில் பேடை அரிக் குரல் அழைஇ*
*சென்று வீழ் பொழுது சேவற்கு இசைப்ப*
*பவளச் செங் கால் பறவைக் கானத்து*
*குவளை மேய்ந்த குடக் கண் சேதா -------------------------------------------------05-130*

*முலை பொழி தீம் பால் எழு துகள் அவிப்ப*
*கன்று நினை குரல மன்று வழிப் படர*
*அந்தி அந்தணர் செந் தீப் பேண*
*பைந் தொடி மகளிர் பலர் விளக்கு எடுப்ப*
*யாழோர் மருதத்து இன் நரம்பு உளரக்*
*கோவலர் முல்லைக் குழல் மேற்கொள்ள*
*அமரக மருங்கில் கணவனை இழந்து*
*தமர் அகம் புகூஉம் ஒரு மகள் போல*
*கதிர் ஆற்றுப்படுத்த முதிராத் துன்பமோடு*
*அந்தி என்னும் பசலை மெய்யாட்டி*
*வந்து இறுத்தனளால் மா நகர் மருங்கு என்*

*குணதிசை மருங்கின் நாண்முதிர் மதியமும்*
*1. கிழக்குத் திசையில் நண்பகல் கடந்த உதயமாகும் பூரண சந்திரனும்.*
*குடதிசை மருங்கிற் கென்றுவீழ் கதிரும் 120*
*2. மேற்குத் திசையில் சென்று வீழும் சூரியனும்*
*வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக*
*3. வெள்ளியிலான வெண்மையான தோட்டுடன், பொந்தோடுமாக விளங்கும்*
*எள்ளறு திருமுகம் பொலியப் பெய்தலும்*
*4. களங்கமற்ற அழகிய திருமுகமும் பொலிவுற்று விளங்கலும் புகார் நகர்*
*புகார் நகர் பெண்ணாக, ஒருபுறம் வெண்தோடும், மறுபுறம் பொன்தோடும்*
*5. பொலிகிறது. சூரியன் மறைய, சந்திரன் தோன்றுகிறது.*
*அன்னச் சேவல் அயர்ந்துவிளை யாடிய*
*6. ஆண் அன்னம் தன்னுடைய பெண் அன்னத்துடன் விளையாடுகிறது*
*தன்னுறு பெடையைத் தாமரை யடக்கப்*
*7. பெண் அன்னம் தாமரை மலரில் சென்று அமரும். மாலையில் தாமரை மலர் இதழ்களை மூடும். பெண் அன்னம் தாமரை மலர்களால் இதழ்களால், மூடப்பட்டு விடும்.*
*பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்*
*8. பூவிதழ்கள் சிதறும்படியாக சிறகடித்து சிதைத்து, தன் பெண் அன்னத்தை மீட்டு*
*டோங்கிருந் தெங்கின் உயர்மட லேற*
*9. ஓங்கிய தென்னை மரத்தில் ஏறியது. இது என்னவென்றால் மாலையிலே பறவைகள் எல்லாம் மரங்களிலே அடைவதைக் கூறுகின்றது. இது இயறகை நிகழ்வாகும்.*

*இங்கு ஒரு குறிப்புப் பொருளும் அடங்கியுள்ளது. என்னவென்றால் மணிமேகலை உவவனம் என்னும் மலர்வனத்துக்கு மலர் கொய்யத் தன் தோழியுடன் வருகிறாள். அவளக் காண வருகிறான் உதய குமாரன். அவன் மணிமேகலை வரும்வரை காத்திருக்கிறான். அவள் வரவில்லை.*

*காம நோயுடன் அவன் திரும்புகிறான். அந்த வேளை அங்கு வந்த மணிமேகலை, காதல் வயப்பட்டாலும், அந்தக் காதல் கெட்டு ஒழிக என வேண்டுகிறாள். இவ்வேளை அங்கு வந்த மணிமேகலா தெய்வம், வந்து அவளை மீட்டுக் கொண்டு போகிறது. இதனை, குறிப்பாக காட்டுகின்றார் ஆசிரியர். அதாவது, ஆண் அன்னம், தன் பேடையை மீட்பது போல், உதயகுமாரனை எண்ணி, காதல் வயப்பட்டாலும், மணிமேகலை காதல் கெட்டு ஒழிக என்பதை அறியும் மணிமேகலா தெய்வம் அவளை மீட்டுச் செல்கிறது.*

*அன்றிற் பேடை அரிக்குர லழைஇச்*
*10. அன்றில் பேடை தன் மெல்லிய குரலால், ஆண் பறவையை சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்பப்*
*11. அழைத்து சென்று வீழ்கின்ற மாலைப்பொழுதுச் செய்தியைக் கூறுகின்றது.*
*பவளச் செங்காற் பறவைக் கானத்துக்*
*12. பவளம் போன்ற சிவந்த கால்களையுடைய பறவை நிறந்த காட்டிலே*
*குவளை மேய்ந்த குடக்கட் சேதா*
*13. குவளை மலர்களை மேய்ந்த திரட்சியான சிவந்த கண்களை உடைய பசுக்கள் மேய்கின்றன.*
*முலைபொழி தீம்பால் எழுதுக ளவிப்பக்*
*14. பசுக்கள் மேய்ந்து விட்டுச் செல்ல அவற்றின் முலைகளிலிருந்து பொழிகின்ற தீம்பால், புகார் நிலத்துப் புழுதியை அடக்கிச் செழிப்படையச் செய்கின்றன. இங்கு நாட்டு வளம் பேசப்படுகின்றது. கன்றுநினை குரல மன்றுவழிப் படர*
*15. அவை தன் கன்றுகளை நினைத்துக் குரலெழுப்பியவாறு தன் தொழுவம் நோக்கி நடக்கின்றன. மாலைவேளையில் பசுக்கள் தொழுவம் நோக்கி நடப்பதும் இயற்கையின் செயற்பாடு.*
*அந்தி யந்தனர் செந்தீப் பேணப்*
*16. அந்தி மாலை வேளையில் அந்தணர்கள், யாகத்துக்குரிய செந்தீயை வளர்ப்பர்*
*பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப*
*17. பசுமையான வளையல்கள் அணிந்த பெண்கள் பலரும் வீடுகள் தோறும் விளக்குகளை ஏற்றி வைக்கிறார்கள்.*
*யாழோர் மருதத் தின்னரம் புளரக்*
*18. யாழ் வாசிக்கும் பாணர்கள், யாழின் நரம்புகளை வருடி, மருதப் பண்ணை இசைக்க*
*கோவலர் முல்லை குழன்மேற் கொள்ள*
*19. இடையர் புல்லாங்க்குழலால், முல்லைப் பண் இசைக்கின்றனர். இந்த நிலையில் தான் புகார் நகரில் மாலைப்பொழுது வருகின்றது.*
*அமரக மருங்கிற் கணவனை யிழந்து தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்*
*20. போர்க்களத்தில் கணவனை இழந்து தமது உறவினர் வீட்டுக்குச் செல்லும் ஒரு பெண்மகள் போல மாலைப்பொழுது வருகிறது.*
*கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமோ*
*21. சூரியனை வழியனுப்பி வைக்க முதிராத நீங்காத துன்பமொடு*
*டந்தி யென்னும் பசலைமெய் யாட்டி*
*22. அந்தி எனும் பசலை தழுவப்பெற்ற மேனியொடு*
*வந்திறுத் தன்னால் மாநகர் மருங்கின்*
*23. புகார் என்னும் மாநகரகை மாலை வந்தடைந்தாள்*

*காலை வந்தது. இன்பம் தந்தது, மதியம் இன்னும் சிறப்பாகச் சிரித்து வந்தது. மாலை மட்டும் மங்கலாக வந்தது. காலை வெளிச்சமாக இருந்து, மதியம் சிரித்து வந்தது, அந்தி என்னும் பசலை கொண்ட மேனியுடன் காதலனான சூரியன் பிரிந்த துயருடன் மாலை வந்தது. அது தன் காதலனை வழியனுப்பி வைத்து விட்டு, மாலை மங்கலாக வருகிறது. இயற்கை நிகழ்வாக, மானிட நடத்தையாக, பறவை விலங்கு பற்றிய செயலாக்க காட்டப்படுகிறது. சூரியன் சென்று மறைகிறது. சந்திரன் உதிக்கிறது. இப்படி பல நிகழ்வுகளாக புகார் நகர மாலைக்காட்சி உருவகிக்கப் பட்டுள்ளது.*

*உவமை அணி, அமரகமருங்கில்,*
*தற்குறிப்பேற்ற அணி, மாலை மங்கலாக வருவது, காதலனை வழியனுப்பி வைத்த துயருடன் வருகிறது.*
*புகார் நகரின் சிறப்பு.*
*சூரிய சந்திரன் ஒளியால், வனப்பு மிக்கதாக, பறவை விலங்கின் அன்புணர்வுடன், பெண்கள் வீடுகளில் விளக்கேற்ற, பாணர் மருதப் பண்ணிசைக்க, கோவலர் புல்லாங்குழல் இசைக்க, அந்தணர் யாகத்துக்குரிய செந்தீ வளர்க்கின்றனர். இப்படி பலப் பல இயற்கைக் காட்சிகளைக் கோர்த்துச் சொல்கிறார் ஆசிரியர்.*

இந்திரவிழாக் காண வந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையை வான்வழியே எடுத்துச் செல்கிறது. மணிபல்லவத் தீவில் அவளுக்குப் பழம்பிறப்பை உணர்த்துகிறது. தீவதிலகை என்பவள் அறிவுரைப்படி மணிமேகலை அமுதசுரபி என்னும் அற்புதப் பாத்திரத்தைப் பெற்று மீண்டும் புகார் நகருக்கு வருகிறாள். தன் தாயுடனும், சுதமதியுடனும் அறவண அடிகளைச் சந்திக்கிறாள். அவர் அவளுக்கு ஆபுத்திரன் கதையை எடுத்துரைக்கிறார். பசிப்பிணி நீக்கும் அறத்தைச் செய்யுமாறு அறிவுறுத்துகின்றார். காயசண்டிகை என்பாள் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதற் பிச்சை பெறுகிறாள்.

ஆதரவு அற்றவர்களுக்கும், காலில்லார், கண்ணில்லார், காது கேளாதார் முதலியோர்க்கும் உணவளிக்கும் அறப்பணியைத் தொடர்கிறாள். உலக அறவி என்ற இடத்திற்கு அவள் சென்றபொழுது, உதயகுமரன் அவளைத் தொடர்கிறான். தன் மந்திர வலிமையால் காயசண்டிகை வடிவத்தை அவள் மேற்கொள்கின்றாள். சிறைச்சாலைக் கைதிகட்கு உணவூட்டுகிறாள். அரசன் இவள் அறிவுரை கேட்டுச் சிறையை அறச்சாலை ஆக்குகிறான்.

காயசண்டிகை வடிவில் இருப்பவள் மணிமேகலையே என்று உணர்ந்த உதயகுமரன் அவளை மீண்டும் காணப் போனபோது, அவள் அவனுக்கு அறிவுரை கூறுகிறாள். அப்போது காயசண்டிகையின் கணவன் காஞ்சனன் என்பவன் கைவாளால் உதயகுமரன் இறக்கிறான். மணிமேலை சிறை செய்யப்பட்டு பல துன்பங்கட்கு ஆளாக்கப்படுகிறாள். அரசமாதேவி செய்த தீமைகளையெல்லாம் தன் தவ வலிமையால் வென்று அவளுக்கு அறிவுரை கூறுகின்றாள். எல்லா உயிர்க்கும் அன்பு செய்யுமாறு அவளுக்கு அறிவுறுத்துகின்றாள்.

பின்னர் ஆபுத்திரன் அரசனாக ஆளும் நாகபுரம் செல்கிறாள். அவனுடன் மணிபல்லவத்திற்கு வருகிறாள். ஓர் ஆண் வடிவம் தாங்குகின்றாள். பல சமயவாதிகளிடம் அவரவர் சமயத் தத்துவங்களையும் கேட்டறிகின்றாள். கச்சி மாநகரில் இருந்த அறவண அடிகளைத் தன் தாயுடன் அடைகிறாள் அவரை வணங்குகின்றாள். அவர் அவளுக்குப் புத்த தருமத்தைப் போதித்தார். இறுதியாகத் தவ நெறியை மேற்கொண்டு, தன் பிறவிப் பிணி நீங்குமாறு முயல்கின்றாள்.

இக்காவியத்தில் மேலும் ஆதிரை, ஆபுத்திரன், சுதமதி, விசாகை, மருதி முதலானோர் பற்றிய கிளைக்கதைகளும் உள்ளன. இவை மூலக்கதையோடு தொடர்புற்றுக் கதைக்குச் சுவையூட்டுகின்றன.

**நூற்பட்டியல்:**

**மணிமேகலை, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன்., பாரி நிலையம், 184 பிராட்வே., சென்னை 108. மறுபதிப்பு 2011.**

கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்ராறியோ மாகாண வோன் நகரத்தில் புதிய இளைஞர் நலன் காக்கும் நிலையம் திறந்து வைக்கப்பெற்றது




ஒன்ராறியோ மாநிலத்தின் சுகாதார அமைச்சின் உளநலத்துறையின் இணை அமைச்சர் விஜய் தணிகாசலம், சட்டமன்ற உறுப்பினர்களான ஸ்டீபன் லெச்சே மற்றும் லோரா ஸ்மித் ஆகியோர் மற்றும் சமூக ஒத்துழைப்பாளர்களுடன் இணைந்து வோனில் மேபிள் இளைஞர் நல மையத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்தனர். இவ்வழியாக, மனநலம் மற்றும் போதைப் பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகும் இளையவர்கள் எளிதாகவும் விரைவாகவும் இணைவதன் மூலம் மாகாண சுகாதாரப் பராமரிப்பு முறையைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது.



“இளைஞர் நல மையங்கள் இளைஞர்களை இணைத்து செழிக்கத் தேவையான ஆதரவை வழங்குவதாகும்”, என்று அமைச்சர் விஜய் தணிகசலம் தெரிவித்தார். “இந்த வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலம், ஒன்ராறியோவின் மனநலம் மற்றும் அடிமையாதல் அமைப்பை வலுப்படுத்துகிறோம், மேலும் இளைஞர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பாதுகாப்பான, வரவேற்கத்தக்க இடத்தில் வசதியான, ஒருங்கிணைந்த பராமரிப்பைப் பெறுவதை எளிதாக்குகிறோம்”.

புதிய மையம் 12 முதல் 25 வயதுடைய இளைஞர்களுக்கு இலவச, வாக்-இன் சேவைகளை வழங்குகிறது, சேவைகளில் மனநலம் மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டு ஆதரவு, முதன்மை பராமரிப்பு, சகா ஆதரவு மற்றும் சமூக சேவைகள் ஆகியவை அடங்கும். மையத்தின் மூலம் வழங்கப்படும் கூடுதல் சேவைகளில் புதியவர்களுக்கான ஆதரவு, வேலைவாய்ப்பு சேவைகள் மற்றும் சமூக ஆதரவை அணுகுதல் ஆகியவை அடங்கும்.

ஒன்ராறியோ 22 இளைஞர் நல மையங்களின் ஆரம்ப மாநில வலையமைப்பை நிறுவியது. ஒன்ராறியோ இப்போது 10 புதிய மையங்களைச் சேர்ப்பதன் மூலம் இளைஞர் நல மையங்கள் ஒன்ராறியோ திட்டத்தை விரிவுபடுத்த மூன்று ஆண்டுகளில் கூடுதலாக $8.3 மில்லியனை முதலீடு செய்கிறது. இந்த தளங்கள் போர்ட் ஹோப், தண்டர் பே, ஆக்ஸ்போர்டு கவுண்டி, வோன், பிராம்ப்டன், அக்வேசாஸ்னே, பான்கிரா.ஃப்ட், கேம்பிரிட்ஜ், ட.ஃபெரின் கவுண்டி மற்றும் டர்ஹாம் ஆகிய இடங்களில் அமைந்திருக்கும். இந்த விரிவாக்கம் மொத்த மையங்களின் எண்ணிக்கையை 32 ஆகக் கொண்டுவருவதோடு இந்த ஆண்டின் பிற்பகுதியில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சட்டவிரோத கட்டிடங்களுக்கு எதிராக வடமராட்சியில் சிவப்பு எச்சரிக்கை!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் சில பிரதேசங்களில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை ஆகிய பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு எதிராக பருத்தித்துறை பிரதேச சபையால் சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

அதில் “பிரதேச சபையின் அனுமதியின்றி தங்களால் மேற்கொள்ளப்படும் கட்டுமான பணிகளை உடன் நிறுத்தவும். மீறினால் சட்ட நடவடிக்கைக்கு உட்படுவீர்கள்” என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையினால் இந்த சிவப்பு நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.



# வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கோப் சிற்றி வர்த்தக நிலையம் வங்களாவடியில் திறக்கப்பெற்றது!



வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வர்த்தக கிளை (கோப் சிற்றி) 1ம் திகதி புதன்கிழமை அன்று வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை கட்டடத் தொகுதியில் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையளர் கி.சந்திரசேகரன் அவர்களல் நாடாவெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப் பட்டது.



வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் த .தர்மராஜேந்திரன் தலைமையில் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகள் பணியாளர்களது பிரசன்னத்துடன் குறித்த நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

நீண்டகாலமாக தேவையான பொருட்களை வேலணை நுகர்வோருக்கு குறைந்த விலையில் நம்பகத் தன்மையுடன் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த நிலையில் தற்போது நவீன வசதிகளுடன் குறித்த வர்த்தக கிளை திறந்துவைக்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மல்லாவியில் இருந்து மன்னார் காற்றாலை திட்டத்திற்கு ஆதரவாக குரல்எழுப்ப உணவு, பணம் கொடுத்து அழைத்து வரப்பட்ட இளைஞர்கள்

## அழைத்து வந்தவர்கள் தங்களை போராட்டத்தில் இறக்கி விட்டுவிட்டு ஓடி சென்று விட்டதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவிப்பு

**- எஸ்.ஆர்.லெம்பேட் (02.10.2025)**

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயல் திட்டத்திற்கு எதிராக தொடர்ச்சியாக பல்வேறு விதமான போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் கடந்த திங்கட்கிழமை மாவட்டம் முழுவதையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு காற்றாலைக்கு எதிராக போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.



இவ்வாறான பின்னணியில் 2ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் காலை மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக மன்னார் மாவட்டத்தை சேராத சில இளைஞர்கள் உள்ளடங்களாக ஒரு குழு ஒன்றிணைந்து “காற்றாலை மன்னார் மாவட்டத்திற்கு வேண்டும்” என போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தை தொடர்ந்து காற்றாலை தொடர்பில் மகஜர் ஒன்றும் மாவட்ட செயலகத்தில் கையளிக்க காத்திருந்தனர்.

இந்த பின்னணியில் குறித்த போராட்ட காரர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் ஏற்பட்ட நிலையில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சிலர் அந்த குழுவிடம் கேள்வி எழுப்பிய நிலையில் சிலர் தப்பி சென்றனர்.

ஒரு சில இளைஞர்கள் தடுக்கப்பட்டு அவர்களிடன் போராட்டம் தொடர்பில் வினவப்பட்ட நிலையில் கூட்டம் ஒன்று என்று கூறி தங்களை மல்லாவியில் இருந்து அழைத்து வந்ததாகவும் பணம், உணவு மற்றும் ஏனைய செலவுகள் தாங்கள் பார்த்துக் கொள்வதாக தெரிவித்து அழைத்து வந்து போராட்டத்தில் இறக்கி விட்டுவிட்டு தங்களை அழைத்து வந்தவர்கள் ஓடி சென்று விட்டதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றும் காற்றாலைக்கு எதிரான போராட்டத்தில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட காற்றாலை நிறுவனம் பல்வேறு முயற்சிகள் எடுத்துவருவதாகவும் தாங்களாகவே கிராமங்களில் உள்ள இளைஞர் கழகங்களிடம் உதவி செய்வதாக கூறி கோரிக்கை கடிதங்களை பெற்று அவற்றை காற்றாலைக்கு ஆதரவு கடிதங்களை போல் தற்போது சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருவதாகவும் உள்ளூர் இளைஞர் கழகங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

(12 பக்கம் தொடர்ச்சி)

## ஸ்ரீலங்கை அரசியலில் "மொட்டு" மீண்டும் மலருமா?

ஒருவர் கூட போட்டியிடவில்லை. கட்டுப்பணம் செலுத்தவென புலம்பெயர் உறவுகளிடம் சேகரித்த பணம் எங்கே? ஒரு கட்டத்தில் நிதிஉதவி செய்த புலம் பெயர் உறவுகள் சிலர் கணக்கு கேட்டபோது அவர்களுடன் அர்ச்சுனா முரண்பட்டார். தனது கார் திருத்த 36 இலட்சம் ரூபா செலவானதாக கணக்கு காட்டினார். அது மட்டுமல்ல பிரபாகரன் எனது தெய்வம் எனும் அர்ச்சுனா பாராளுமன்றத்திலேயே பல தடவைகள் இராணுவத்திற்கு நன்றி தெரிவித்து கருத்துக்களை முன்வைத்துள்ளார். தேசிய மக்கள் சக்திக்கு 156 எம்.பிக்கள் அல்ல. என்னுடன் சேர்த்து 157 எம்.பி.க்கள் என்றும் அறிவித்திருந்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் பங்கேற்று எந்த ஆதாரங்களுமின்றி வாய்க்கு வந்தபடி புள்ளி விபரங்களை அள்ளிவிட்டு ஆக்ரோஷமாக பேசி அரச அதிகாரிகளுக்கு சேறடித்து தமிழ் அரசியல்வாதிகளை எள்ளிநகையாடி இறுதியில் அந்தக்கூட்டங்களில் எந்த முடிவுகளையும் எடுக்கவிடாது தடுத்ததே அர்ச்சுனா செய்த மக்கள் சேவை, ஆனால் சமூக வலைத்தளங்களில் பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு சமூக ஊடகத்தினர் போடும் நடந்ததற்கும் தலைப்புக்கும் கொஞ்சமேனும் தொடர்பில்லாத அதிரடித் தலைப்புக்கள் அர்ச்சுனாவை ஹீரோவாக மக்களைப் பார்க்க வைத்தது. அதனால்தான் இறுதியில் அர்ச்சுனாவே சமூக ஊடகம் ஒன்றை நடத்தி அதன் மூலமும் டொலர்களில் சம்பாதிக்கத் தொடங்கியுள்ளதுடன் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றியும் வருகின்றார்.

பாராளுமன்றத்தில் அடிக்கடி எழுந்து அர்ச்சுனா எம்.பி. பொருத்தமற்ற விடயங்களை பேசுவதற்கு காரணம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாராளுமன்ற வருகை, சபைக்குள் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தர வரிசைப்படுத்தும் மந்திரி. எல்கே. என்ற இணையத் தளத்தில் முதலிடம் பிடிப்பதற்கேயாகும். அதில் தற்போது அர்ச்சுனா 5 ஆவது இடத்தில் உள்ளார். எனவே அவர் மக்களுக்காக பாராளுமன்றத்தில் அடிக்கடி எழுந்து குரல் கொடுக்கவில்லை. மந்திரி. எல்கே. இணையத் தளத்தில் முதலிடம் பிடித்து அதனையும் தனது பிரசாரத்துக்கு பயன்படுத்தவே அடிக்கடி எழுந்து பொருத்தமற்ற விடயங்களை பேசுவதுடன் தேவையற்ற குறுக்கீடுகளையும் செய்கின்றார்.

அதுமட்டுமல்ல தன்னுடன் தோளோடு தோள் நின்றவர்களுக்கு கூட துரோகம் செய்து அவர்களை மிகவும் கீழ்த்தரமாக விமர்சிப்பதும் தன்னை ஒருவர் எதிர்த்துவிட்டால் அல்லது சமூக வலைத்தளங்களில் எதிராக ஒரு கருத்தை பதிவு செய்து விட்டால் அவரதும் அவரின் குடும்பத்தினரதும் புகைப்படங்களை தனது சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி மிகவும் அருவருக்கத்தக்க வகையில் விமர்சிப்பதும் அர்ச்சுனாவின் மிகவும் இழிவான குணம். பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சியின் பெண் வேட்பாளர் ஹோட்டல் ஒன்றில் உணவருந்திக்கொண்டிருந்த அர்ச்சுனாவிடம் கொடுத்த தனது தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரத்தை அவருக்கு முன்பாகவே அந்த துண்டுப்பிரசுரத்தினால் தனது வாயை, கையைத் துடைத்து அவமானப்படுத்திய அடிப்படை அரசியல் நாகரிகம் கூடத் தெரியாத ஒருவர். சில பெண்கள், பெண் சட்டத்தரணி ஆகியவர்களைப் பற்றி பாராளுமன்றத்திலேயே தனது சிறப்புரிமையை பயன் படுத்தி அவதூறுக் கருத்துகளை கூறிய ஒருவர்.

இவ்வாறாக வாய்க்கு வந்தபடி பொய்களை கூறியும் பித்தலாட்டங்களை செய்தும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தனது சமூக ஊடகத்தையும் வைத்து தமிழ் மக்களை முட்டாள்களாக்கி ஏமாற்றி வரும் அர்ச்சுனா எம்.பி. இப்போது அணி சேர்ந்துள்ளது நாமல் ராஜபக்சவுடன். இதனை பாராளுமன்றத்தில் ஒரு தடவை உரையாற்றும் போது "நாமல் ராஜபக்ச ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் நான் அவரை ஆதரிப்பேன். அதனை வருடம் நேரடியாகவே கூறினேன்.உங்கள் தந்தை சித்தப்பா தமிழ் மக்களுக்கு செய்த வேலைகளை செய்ய வேண்டாம். என்று அவரிடம் கூறியுள்ளேன். அவரும் அதற்கு இணங்கியுள்ளார்" என்று கூறியதன் மூலம் நாமல்ராஜபக்ஸவுடன் தனக்குள்ள தொடர்பை வெளிப்படுத்தினார். அதன்பின்னர் பாராளுமன்றத்தில் பல தடவைகள் நாமலுக்கு ஆதரவாகவும் ராஜபக்சக்களுக்கு ஆதரவாகவும் அர்ச்சுனா குரல் கொடுத்து வருகின்றார்.

தற்போது பாராளுமன்ற அமர்வுகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுவதினால் அதனை நீங்கள் பார்த்தால் பொதுஜன பெரமுனாவை சேர்ந்த நாமல் ராஜபக்ச, சானக எம்.பி.க்கள் உரையாற்றும் போது அவர்களுக்கு பின்னாலுள்ள ஆசனத்திற்கு சென்று அர்ச்சுனா அமர்ந்திருப்பத்தை பார்க்க முடியும் .அர்ச்சுனாவிற்கு முன் வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில்தான் நாம பேசும்போது எழுந்தோடிச்சென்று அவர் நாமலுக்கு பின்னல் அமர்ந்து கொள்வார். அதுமட்டுமல்ல தற்போது கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட போதைப்பொருட்கள் தொடர்பில் ராஜபக்சக்கள் சிக்கியுள்ள நிலையில் அந்த கொள்கலன்களில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் பகிரங்கமாக கூறி அந்தக்கொள்கலன்கள் தொடர்பில் ராஜபக்சக்களை பாதுகாக்கும் நோக்கில் பொய்த் தகவலை பரப்பியவரும் இந்த அர்ச்சுனாதான்.

ராஜபக்சக்களுடனான அர்ச்சுனா எம்.பி.யின் டீலை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் போக்குவரத்து விதிமுறை மீறல் குற்றத்தில் அர்ச்சுனா எம்.பி கைதானபோது பிணை எடுத்தவர் நாமல்ராஜபக்ச. இதன்போது அர்ச்சுனா எம்.பி கருத்துக்கூறுகையில், எனது கடவுள் பிரபாகரன் என்பதை அச்சமின்றிகூறுகின்றேன். ஆனால் சிங்கள மக்கள் தமக்காகச் சேவையாற்றிய மஹிந்த ராஜபக்சவை காட்டிக் கொடுத்துள்ளனர். எனக்காக உயிர் நீத்தவர்களுக்காக நான் முன்னிற்கின்றேன். ஆனால் இந்நாட்டு மக்கள் தமக்காக உயிர் நீத்தஇராணுவ வீரர்களுக்காக முன்னின்ற தமது தலைவரைக்காட்டிக் கொடுத்துள்ளனர். மஹிந்த 'தமிழ் மக்களின் தலைவர் அல்லர். ஆனால் அவர் சிங்கள மக்களின் தலைவராவார். ஆனால் அவர்கள் மஹிந்தவைக் காட்டிக் கொடுத்துள்ளனர். நாமல் உள்ளிட்டோர் கள்வர்கள் எனக் கூறிய போதுநானும் அவற்றை நம்பினேன். முழு நாடும் அதை நம்பியது. பொய் கூறியவர்களை மேலாக பாரிய பொய்களைக்கூறுபவர்கள் வந்ததும் அனைவரும் அவர்களை நம்பினர். ஆனால் இறுதியில் அவர்களது பொய்கள் அனைத்தும்தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. எனக்காக முன்னிலையானமைக்காக நாமலுக்கு மதிப்பளிக்கின்றேன்" என்றார்.

மீண்டும் நாட்டில் மீண்டெழும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ராஜபக்சக்கள் தற்போது இந்த அண்டப்புளுகன் ஆகாசபுளுகனான அர்ச்சுனாவை தேர்ந்தெடுத்து பிரபாகரன் புகழ் பாட வைத்து அதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள இனவாதத்தை தூண்டி அரசியல் ஆதாயம் தேடப்பார்க்கின்றார்கள். அதற்காகவே 2024 ஜூலை மாதம் வரையில் விடுதலைப்புலிகளின் தலைவரைப் பற்றியோ விடுதலைப்புலிகளைப்பற்றியோ எங்கும் எப்போதும் ஒரு வார்த்தைகூடப் பேசாத, தமிழ் மக்களின் எந்த வித வெகுஜனப் போராட்டங்களிலும் பங்கேற்காத, தமிழ் மனைவியை கைவிட்டு சிங்கள மனைவியுடன் குடும்பம் நடத்தும் இந்த அர்ச்சுனா என்ற அரசியல் பித்தலாட்டக்காரர் இன்று "பிரபாகரன் எனது தெய்வம்" என்பதும் "தமிழ் மக்களுக்காகவே நான் முன்நிற்கின்றேன்" என்றும் முழங்கி சிங்கள இனத்தை உசுப்பேத்தி வருகின்றார், தமிழ் மக்களுக்காக பேசுவதாக நடிக்க புலம்பெயர்ந்தவர்களிடம் பணமும் ராஜபக்சக்களுக்கு ஆதரவளிக்க ராஜபக்சக்களிடமிருந்து உதவிகளும் பெறும் இந்த மீனுக்கு தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் அர்ச்சுனா எனும் "விலாங்கு மீன்" நிச்சயம் ஒரு நாள் வலையில் சிக்கத்தான் போகின்றது.



## திருக்குறள் அமுதம் (நிலைமண்டில ஆசிரியப்பா)

திருவள்ளுவர் தந்தார் திருக்குறள் அமுதமே!
கருத்தோடு சொன்னார் கவிதை தன்னையே!
விருப்போடு நாமும் விரும்பிப் படித்தே!
தருமத்தைக் கற்றுத் தரணியில் உய்வோம்
அறமும் பொருளும் அருமை இன்பமும்
சிறப்பாய் எமக்குச் சீராய்த் தந்தார்
மறந்திடா நாமும் மகிழ்வொடு கற்றே!
அறத்துடன் வாழ்ந்து அமைதி அடைவோம்
கடவுள் வாழ்த்தில் கனிவாய்த் தொடங்கி
அடக்க முடைமையில் அடியை வைத்து
இல்வாழ்க்கை சொல்லி இனியவை கூறல்வரை
கல்லாமை தொடங்கி கொல்லாமை தந்தார்
அன்புடமை நிலையாமை அருளுடைமை வெகுளாமை
நன்னெறியில் செல்வம் நயந்து சொன்னார்
நூற்றுமுப் பத்துமூன்று நுண்ணிய அதிகாரம்
போற்றும்படி தந்து புகழுடம்பு அடைந்தார்
ஆயிரத்து முன்னூற்று முப்பது அரும்குறள்
பாயிரமாய் எங்களுக்குப் பரிசாக அளித்தார்
பாரெலாம் போற்றும் பாகான திருக்குறளை
ஊரெலாம் கூட்டி ஒலிக்கச் செய்வோம்.
தமிழென்ற சொல்லை தன்குறளில் சொல்லாமல்
தமிழின் பெருமையை தரணியெலாம் விதைத்தார்
மொழிகள் எண்பதில் மொழிபெயர்த்த பொதுமறையை
வழிவழியாய்க் கற்று வாழ்வு பெறுவோமே!.

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

### வீணாவின் கவிக்கணை

**இன்பங்கள் பல நாள்
துன்பங்கள் சில நாள்
இவை இரண்டும்
ஒன்றென கலந்ததே
வாழ்க்கை,
இதில் நாம் இழப்பது
ஒன்றென்றால்
அதன் மூலம்
கற்பதும் அதனால்
கிடைக்கும் அனுபவமும்
பலமடங்கு!**

# இவ்வார ராசிபலன்

## 03-10-2025 வெள்ளி தொடக்கம் 09-10-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி ஒழியம். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C




**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்காண வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோஷம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யேசானை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T





**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையக்கடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையக்கடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K





**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரம். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை, அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1165

## அம்பாறை வில்லுப்பிள்ளையாஉ கோவில் மட்டக்களப்பு

*" திருவாக்கும் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும் -உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்*
*காதலாற் கூப்புவர் தம் கை. "*

இந்துசமய வழிபாட்டிலே முக்கிய இடத்தைப் பெற்றுள்ள ஆலயங்களை புலம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றமை கடவுளின் கருணையாகவே காணப்படுகின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்ட அழகிய சம்பூர்க்கிராமத்தில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மன் ஆலய வரலாற்றை வாசித்துவிட்டு "இந்தத் தலைமுறையில் நான் உயிர் வாழும் காலத்தில் சம்பூர் பத்திரகாளி கோவிலை மீண்டும் ஒருமுறை சென்று தரிசிக்கும் வாய்ப்புக் கிடைக்குமென்று நினைக்கவில்லை" என்று சில அன்பர்கள் கண்ணீருடன் அந்த ஆலயத்திற்கும் தமக்குமுள்ள பந்தத்தை வெளிப்படுத்தியபோது மனங் கலங்கியது. எமது ஆலயங்கள் அழிக்கப்பட்டாலும், எதிர்காலச்சந்ததியினராவது எனது குறிப்புக்கள் மூலம் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களை அடையாளங்காணட்டும் என்ற ஆதங்க மிகுதியே தொடர்ந்தும் ஆலய வரலாறுகளை எழுதத் தூண்டுகின்றது.

ஆனால் அதற்கும் மேலாக ஆலய வரலாறுகளின் மூலம் தாம் வாழ்ந்த மண்ணிலே விட்டுவந்த ஆலயங்களையும் அதனோடு எவ்வாறு தாம் ஒன்றிணைந்து வாழ்ந்தோம் என்று பலரும் விபரிக்கும்பொழுது, அந்தத் தமிழ் உறவுகளிடம் நான் கூறிய ஒரே வார்த்தை இதுதான், "கவலைப்படாதீர்கள் நீங்கள் இழந்துவிட்டதாக எண்ணுவது ஒரு மாயை. விரைவில் நீங்கள் இழந்துவிட்டதாக எண்ணும் உங்கள் மண்ணிற்குத் திரும்பவும் செல்லும் வாய்ப்பு விரைவில் மலரும். உங்கள் உணர்வோடும் வாழ்க்கையோடும் உறவாடிய உங்கள் ஆலயங்களையும், நீங்கள் நேசித்த மண்ணையும் தரிசிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை" என்று அவர்களுக்கு அன்போடு அன்றொருநாள் ஆலய வரலாற்றிலே பதிவு செய்திருந்தேன். அந்தநாள் இன்று அமைந்துவிட்டது. "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடை மெலிந்து நண்ணினும் நண்ணுவர்" என்ற பெரியோர் வாக்கை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழரின் தாயகப் பிரதேசமாக விளங்கிச் சிறிது சிறிதாகத் தமிழர்கள் வெளியேற்றப்பட்டுள்ள அம்பாறை மாவட்டத்திலுள்ள, வில்லுப்பிள்ளையார் கோவில் மிகவும் பிரசித்திபெற்ற கோயிலாக விளங்குகின்றது.

ஆற்றங்கரையோரத்திலும், மரங்களின் நிழலிலும் வீற்றிருக்கும் பிள்ளையாரை வினைதீர்க்கும் பிள்ளையார் என்று பக்தர்கள் கூறுவது வழக்கம். சாணி, மஞ்சள், களிமண், கருங்கல், ஐம்பொன் என தத்தமது வசதிக்கேற்ப திருவுருவம் அமைத்து வழிபடும் வழக்கம் இந்து மக்களிடையே காணப்படுகின்றது. விநாயகர் திருவுருவம் இல்லாத ஆலயம் இல்லை. முதல் வழிபாடு மூத்த கணபதிக்கு என்பது இந்து மரபு. இந்துக்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய மரபுகளாயினும், ஆலய மரபுகளாயினும் பிள்ளையாரை வணங்கி வழிபட்ட பின்பே ஏனைய மரபுகள் தொடர்வது வழக்கம். எடுத்த காரியம் வெற்றியுடன் நிறைவேற விக்னங்கள் தீர அருள் புரிபவராக விநாயகர் காணப்படுகின்றார்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நால்வேதங்களைப் பொதுப் பிரமாணமாக ஏற்கும் வைதிகசமயங்க ஆறு வகைப்படும். அவற்றுள்ளே கணபதியைப் பரம்பொருளாகக் கொண்டு விளங்கியது காணபதம் என அழைக்கப்பட்டது. இந்துமதத்திலே தளர்வு ஏற்படும் நிலையைப் போக்க, ஆதிசங்கரர் நிறுவனப்படுத்திய சண் மதங்களிலே, கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட காணபதமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. ஒருகாலத்திலே புகழ்பெற்ற தனி மதமாகக் காணப்பட்ட காணபதம், பின்னாளில் நலிவுற்று, தனது தனித்துவத்தை இழந்து சைவசமயத்தோடு இணைந்துவிட்டது.

பிள்ளையார் என்று மக்கள் போற்றி வணங்கும் இவரைப் பல பெயர்களால் அழைக்கும் வழக்கம் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் காணப்படுகின்றது. இப்பெயர்கள் அனைத்துமே பொருட்சிறபுடையவையாக விளங்குகின்றன. வக்ரதுண்டர், இலம்போதரர், மூீகவாகனர், விநாயகர், விக்னேசுவார், மூத்தபிள்ளையார், மூத்தநாயனார், கணபதி போன்ற பல பெயர்கள் வழக்கிலுண்டு.

இவற்றுள் கணபதி என்னும் சொல் சமய தத்துவ உண்மைகள் அடங்கிய பொருட் சிறப்புடையது. "க" என்னும் எழுத்து மனோவாக்குக்கள் என்ற பொருளையும், "ண" என்னும் எழுத்து கடந்த நிலையையும், குறிக்கும். தலைவன் என்னும் பொருள் தரும் "பதி" என்னும் சொல்லோடு சேர்ந்து, மனம் வாக்குக்களைக் கடந்த நிலைக்குத் தலைவரான தெய்வம் என்பதைக் கணபதி என்னும் சொல் விளக்குகின்றது.

எழுத்து, சொல் இவற்றின் அடிப்படையிலன்றி, கணபதியின் வடிவத்தின் அடிப்படையிலும் விளக்கங் காணப்படுகின்றது. ஏனைய தெய்வங்களினின்றும் கணபதியை வேறுபடுத்துவது அவரின் யானை முகமாகும். இது "ஓம்" என்னும் பிரணவ வடிவிலுள்ளது. எனவே கணபதி ஓங்காரப்பொருளின் அடையாளம் என்பது பரவலான விளக்கமாகக் காணப்படுகின்றது. கணபதியின் தும்பிக்கையின் அமைப்பை நோக்குவோர் இவ்விளக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். கணபதி வழிபாடு பல சமயத்தாராலும் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்புப்பிரதேசத்திலும் விநாயக வழிபாடு சிறப்புற்றுக் காணப்படுகின்றது.






இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமாகாண கல்விப் புலத்தில் என்றுமில்லாதவாறு அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு!

பு. கஜிந்தன்

## வன்னி மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரின் தலையீடுகள் எல்லைமீறி செல்லுகின்றனவாம்



வடமாகாண கல்விப் புலத்தில் என்றுமில்லாதவாறு அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. பதவி நியமனங்களின் போது தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களாக செயற்படுபவர்களுக்காக பரிந்துரைக்கும் செயற்பாடுகளில் அரசாங்க எம்.பிக்கள் செயற்படுகின்றனர் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக வன்னி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரின் தலையீடுகள் எல்லைமீறி செல்லுகின்றன.

பாடசாலை நிகழ்வுகளில் அரசியல் வாதிகள் செல்லக்கூடாது என்ற தேசிய மக்கள் சக்தியின் பிரதமரின் கூற்று வெறும் வாய்ப்பேச்சோடு நின்றுவிட்டது. தம்மை அரசாங்க ஆதரவாளர்களாக காட்டி, அரசாங்க தரப்பு அரசியல்வாதிகளை பாடசாலைகளுக்கு அழைத்து குறுக்கு வழிகளில் வரப்பிரசாதங்களை அனுபவிக்கும் கீழ்நிலைக்கு சில பாடசாலை அதிபர்கள் செல்லும் நிலைக்கு, வடமாகாணத்தின் கல்வியில் அரசியல் தலையீடு அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் அமுக்கக் குழு போன்று நாடகமாடி, ஆசிரியர்களின் உரிமை பற்றிப் பேசியிருந்த ஜே.வி.பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கம், இன்று அரசாங்க அமைச்சர்களாலும் பிரதி அமைச்சர்களாலும் ஆட்கொள்ளப்பட்டு, ஏனைய தொழிற்சங்களை நசுக்கும் செயற்பாட்டிலும், கல்விப்புலத்தை அச்சுறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள்.

பிரதி அமைச்சர்களாகவும் இருந்துகொண்டு, ஜே.வி.பி சார்பு ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்களாகவும் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தி, வடமாகாண ஆளுநருடன் அமைச்சர்களாக அமர்ந்துகொண்டு, தமது தொழிற்சங்கத்துடனான சந்திப்பு என்ற போர்வையில் வடமாகாண அதிகாரிகளை மிரட்டுகிறார்கள். இதுபோன்ற அரசியல் தலையீடுகள் முன்பிருந்த எந்த ஆட்சியிலும் நடைபெற்றதில்லை.

வடமாகாணத்தில் நடைபெறும் இடமாற்றங்களில் இடமாற்றச்சபை, மேன்முறையீட்டு சபையின் தீர்மானங்களை மீறி, அரசாங்க சார்பு தொழிற்சங்கமாக காட்டி அதிகாரிகளை அச்சுறுத்தி ஒருதலைப்பட்சமான முடிவுகளை திணிக்க முயல்கிறார்கள்.

இடமாற்றச் சபைகளின் தீர்மானங்களையே ஒருதலைப்பட்சமாக மாற்றியமைக்க செயற்படும் அதேவேளை, தமது ஆதரவாளர்களுக்கு இடமாற்ற மேன்முறையீட்டு சபையின் அங்கீகாரமின்றி, வடமாகாண ஆளுநரைக்கொண்டு இடமாற்றங்களை நிறுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள்.

வடமாகாண ஆளுநர் தன்னிச்சையாக இடமாற்றங்களை நிறுத்தும் அளவுக்கு அரசியல் தலையீடுகள் எல்லை மீறியுள்ளன அத்துடன் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகிறார்கள்.

தமது பதவி நிலையை மீண்டும் குறுக்கு வழியில் பெற்றுக்கொள்வதற்காக வடமாகாணத்தின் கல்வித் திணைக்களத்திலுள்ள மேலதிக அதிகாரி ஒருவரும், தனது எதிர்கால வரப்பிரசாதங்களை பெறுவதற்காக, ஜே.வி.பி. சார்பு ஆசிரியர் தொழிற்சங்கத்தின் நிகழ்ச்சிநிரலில் செயற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் அரசியல் நிகழ்ச்சிநிரலில் நடக்கும் செயற்பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் முற்றாக எதிர்க்கின்றது. இத்தகைய அரசியல் தலையீடுகளை எதிர்க்கும் முகமாக 2025.09.24ம் திகதிய வடமாகாணத்தில் சேவையின் தேவை கருதிய இடமாற்றம் தொடர்பான, இடமாற்ற சபையை இலங்கை ஆசிரியர் சங்கம் புறக்கணித்து வெளியேறியுள்ளது. குறித்த சில முறைகேடுகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

இடமாற்றங்களில் அரசியல் தலையீடுகள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும். இதுபோன்ற செயற்பாடுகள் தொடருமாயின் இலங்கை ஆசிரியர் சங்கம் பரந்துபட்ட தொழிற்சங்க செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் என தெரிவித்துள்ளார்.

## இவ்வார ராசிபலன்

(24 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q





**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோஷம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T




**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபக்காரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T




**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்கியம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X

MORTGAGE
FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

NESAN
416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8








26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1539 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 3, 2025

# Local Media Roundtable-2025 hosted by Toronto City Councilor Jamal Myers of Ward-23-Toronto City Council.

## றொறன்ரோ நகரசபையின் 23ம் வட்டார உறுப்பினர் கௌரவ ஜமால் மையர்ஸ் அவர்கள் நடத்திய ஊடகச் சந்திப்பு



றொறன்ரோ நகரசபையின் 23ம் வட்டார உறுப்பினரும் **TORONTO RANSIT COMMISSION** எனப்படும் றொறன்ரோ போக்குவரத்து ஆணயத்தின் தலைவருமான கௌரவ ஜமால் மையர்ஸ் அவர்கள் நடத்திய ஊடகச் சந்திப்பானது கடந்த செப்டம்பர் மாதம் 30ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று றொறன்றொ நகரசபையின் ஸ்காபுறோ சபா மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி றொறன்ரோ நகர சபையின் அங்கத்தவரான கௌரவ ஜமால் மையர்ஸ் அவர்கள் பாரிய கடமைப் பொறுப்புக்களுக்கிடையில் பல்லின ஊடகப் பிரதிநிதிகளையும் பிரதம ஆசிரியர்களையும் சந்தித்து தனது உரையில் வீடமைப்பு மேம்பாடு- போக்குவரத்து மற்றும் வீதிகள் அமைத்தல்-வீதிகள் நிலவும் பாதுகாப்பு தொடர்பான தேவைகள்- பூங்காக்கள் மற்றும் மற்றும் மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் மற்றும் றொறன்ரோ நகரசபையின் இவ்வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்டம் ஆகியவை தொடர்பாக விளக்கமான பதில்களை ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அளித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் அவரது உதவியாளரும் அங்கு சமூகமளித்து பல கேள்விகளை அங்கத்தவர் ஜமால் மையர்ஸ் அவர்களிடம் சமர்ப்பித்தனர்.

## கனடா ஸ்காபுறோ— ஏடைடய முயசரயெ ர்ழஅந கழச ளுநநெழைசள அமைப்பு நடத்திய Golden Super Singer Season 7 பாடல்போட்டியின் இறுதிச் சுற்றில் முதலிடம் பெற்ற குகதாசன் சோமசுந்தரம்

கடந்த 27-09-2025 அன்று தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில். கனடா ஸ்காபுறோ- **Villa Karuna Home for Seniors** அமைப்பு நடத்திய **Golden Super Singer Season** 7 பாடல்போட்டியின் இறுதிச் சுற்றில் ஸ்காபுறோவை வதிவிடமாகக் கொண்ட பாடகர் குகதாசன் சோமசுந்தரம் அவர்கள். முதலிடம் பெற்று வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

**Villa Karuna Home for Seniors** அமைப்பின் நிறுவனரும் தலைவருமான இந்திராணி நாகேந்திரம் அவர்கள் தலைமையில் இந்த போட்டி நிகழ்ச்சி சிலமாதங்களாக தேர்வுப் போட்டிகள் நடைபெற்று பின்னர் இறுதிச் சுற்றுப் போட்டி 27ம் திகதி அன்றைய தினம் நடைபெற்றது.



## றிச்மண்ட் பிள்ளையார் தேவஸ்த்தானத்தில் நவராத்திரி விழாவையொட்டி "கவின்கலாலயா இசைக் கல்லூரி" ஆசிரியையும் மாணவிகளும் அளித்த கர்நாடக இசை நிகழ்ச்சிகள்



கடந்த செப்டம்பர் மாதம் 30ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கனடா றிச்மண்ட் ஹில் பிள்ளையார் தேவஸ்த்தானத்தில் நவராத்திரி விழாவையொட்டி கவின்கலாலயா இசைக் கல்லூரி ஆசிரியையும் மாணவிகளும் அளித்த கர்நாடக இசை நிகழ்ச்சிகள் அங்கு சமூகமளித்திருந்த அடியவர்கள் மற்றும் கர்நாடக இசை ரசிகர்கள் ஆகியோரை மகிழ்வித்தன

கவின்கலாலயா இசைக் கல்லூரியின் குரு கவினாலி சிறி அவர்களின் இசைப் பயிற்சியிலும் வழிகாட்டலிலும் கர்நாடக இசையைப் பயின்றுவரும் மாணவிகள் தங்கள் குருவோடு இணைந்தும் குழுவாகவும் மேடையில் இனிய பாடல்களை பாடினர்.

இறுதியில் ஆலயத்தின் சிவாச்சாரியப் பெருமக்கள் இணைந்து கவின்கலாலயா இசைக் கல்லூரியின் நிறுவனரும் குரு மற்றும் மாணவிகளையும் கௌரவித்தனர். ----படங்களும் செய்தியும்:- சத்தியன்

## பிக்கரிங் அருள் ஜோதி சிவனாலயத்தில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் "நாதவீணா நுண்கலைக் கல்லூரி" மாணவிகளின் வீணைக் கச்சேரி பக்தர்களை மகிழ்வித்தது

1734 **Orangebrook Ct Unit 10, Pickering, ON L1W 3G8** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள பிக்கரிங் அருள் ஜோதி சிவனாலயத்தில் கடந்த28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நவராத்திரி விழாவில் "நாதவீணா நுண்கலைக் கல்லூரி" மாணவிகளின் வீணைக் கச்சேரி பக்தர்களை மெய்சிலிர்க்க வைத்தது என்றால் மிகையாகாது.

திருமதி குகனேஸ்வரி சத்தியமூர்த்தியின் மாணவிகளில் பலர் மேடையில் சில மணிநேரங்கள் வழங்கிய வீணைக் கச்சேரி அவர்களது திறமைகளையும் ஆசிரியையின் கற்பித்திறனையும் எடுத்தியம்பின. பங்குபற்றிய மாணவிகள் மற்றும் ஆசிரியை ஆகியோருக்கு ஆலயநிர்வாகத்தின் சார்பில் சிவஸ்ரீ குருஜீ சோமஸ்க் கந்தக்குருக்கள் அவர்கள் பாராட்டுப் பத்திரங்களையும் கௌரவத்தையும் வழங்கினார்.





## கனடா— மொன்றியால் மாநகரில் 11.10.2025 அன்று சனிக்கிழமையன்று நடைபெறவுள்ள "மதுரகான இசை மன்றத்தின்" மாணவி மிதுலா கனகசபை அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம்!

மொன்றியாலில் நீண்ட காலமாக இயங்கிவரும் "மதுரகான மன்றம்" இசைப் பயிற்சி நிறுவனத்தின் நிறுவனர் ஆசிரியை சிவமலர் மதுரநாயகம் அவர்களின் புதல்வியும் இசை ஆசிரியையுமான நயனி மதுரநாயகம் அவர்களின் மாணவியும் திரு-திருமதி கலைச்செல்வன்-ஜெதீபா ஆகியோரின் அன்புப் புதல்வியுமாகிய இசைச் செல்வி மிதுலா கனகசபை அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம்.. கனடா- மொன்றியால் மாநகரில் எதிர்வரும் 11-10-2025 சனிக்கிழமையன்று 4901 **Rue College Beaubois Pierrefonds** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **Theatre Beaubois** மண்டபத்தில் சிறப்புற நடைபெறவுள்ளது. இந்த அரங்கேற்றம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற கலைச்செல்வன் கனகசபை அ வர்களை 514 889 5951 என்ற இலக்கத்தில் அல்லது ஜெதிபா விஜயரடனம் அவர்களை 515 823 5951 என்னும் இலக்கத்தில் அழைக்கலாம்.